இனி இது ரகசியம் அல்ல!

நேற்றிரவு கொழும்பிலிருந்து ஒரு தமிழ் அரசியல் தலைவர் திடீரெனத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

எங்கு இருந்தாலும் 'காலைக் கதிர்' நாளிதழைத் தவறாது விடிகாலையில் மின் அஞ்சலில் வாசிப்பவர் அவர் என்று எனக்கு நன்கு தெரியும்.

பக்கம் 02

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 30 வெள்ளிக்கிழமை 16.11.2018 கதிர் 11

# ஜனாதிபதியின் ஆலோசனையை ஏற்று மீளவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## இன்று நாடாளுமன்றுக்கு வருகிறது



கொழும்பு, நவம்பர் 16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறையாக – உரிய வடிவத்தில் – நாடாளுமன்றில் சமர்ப்பித்து, ஒவ்வொரு எம்.பிக்களின் பெயர் சுட்டி அழைத்து, வாக்கெடுப்பு நடத்தி, உரிய முறையில் அதை நிறைவேற்றித் தந்தால் அதன் அடிப்படையில் அந்தத் தீர்மானம் குறித்து நடவடிக்கை எடுக்கத் தாம் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

அந்த யோசனையை ஏற்று மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன முடிவு செய்திருக்கின்றன.

பக்கம் 11

## அதி உயர் சபைக்குள் நேற்று அடிதடி, ரகளை

### சண்டியர்களாக மாறினர் எம்.பிக்கள்



கொழும்பு, நவ. 16

அடிதடி, அடாவடி, குப்பைவாளித் தாக்குதல், தூஷண வார்த்தைப் பிரயோகம் எனச் சாக்கடை அரசியலுக்கே உரிய அனைத்து அம்சங்களும் நாட்டின் அதிஉயர் சபையான நாடாளுமன்றத்தில் நேற்று அரங்கேறின.

பக்கம் 02

## ரணிலைப் பிரதமராக நியமிக்க மைத்திரி தொடர்ந்தும் மறுப்பு

கொழும்பு, நவ.16

நாடாளுமன்றத்தில் உரிய முறையில் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் மஹிந்த ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்புவதற்குத் தாம் இணங்கினாலும், பிரதமராக ரணில் விக்கிரசிங்கவைத் தம்மால் நியமிக்க முடியாது என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று

பக்கம் 11

## நாடாளுமன்றை இனி முடக்கேன்

### ஜனாதிபதி உறுதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

நாடாளுமன்றை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்கமாட்டேன்

பக்கம் 11

## எரிபொருள்கள் விலை குறைப்பு

கொழும்பு, நவ. 16

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை 5 ரூபாவால்

பக்கம் 11

## நாடாளுமன்றத்துக்குள் கத்தியுடன் ஐ.தே.க. எம்.பி.

### வசமாகச் சிக்கிக் கொண்டார்



கொழும்பு, நவ. 16

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த குழப்பத்தின்போது, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும கத்தியுடன் மோதலில் ஈடுபட்டமை அம்பலமாகியுள்ளது.

பாலித தேவரப்பெருமவின் காற்சட்டைப் பையினுள் கத்தி இருப்பதையும், அவர் கையில் கத்தியுடன் மோதலில் ஈடுபட்டமையையும்,

பக்கம் 11

## மைத்திரிக்கு எதிராகக் கொழும்பில் நேற்றுத் திரண்டது யானைப் படை!

### ஆட்டத்தை ஆரம்பித்தார் ரணில்



கொழும்பு, நவ. 16

தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராகவே போராடினோம். ஜனாதிபதித் தேர்தலாக இருந்தால் என்ன, பொதுத்தேர்தலாக இருந்தால் என்ன அனைத்துக்கும் முகங்கொடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்தார்.

பக்கம் 11

## குளத்துக்கு குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கிச் சாவு!

### வவுனியாவில் நேற்றுப் பரிதாபம்

வவுனியா, நவ. 16

வவுனியா பட்டக்காடு குளிக்கச் சென்ற சிறுவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

பக்கம் 11

## ரயிலுடன் கார் மோதி விபத்து சாரதி சம்பவ இடத்தில் சாவு!

### அரியாலையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 16

அரியாலை, நெளுக்குளம் ரயில் பாதையில் பயணித்த கார், கடுகதி ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் குடும்பத் தலைவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பக்கம் 11

# இணுவிலில் நாளை ஒரு நினைவுப்பகிர்வு

யாழ்ப்பாணம், நவ. 16

இணுவில் கலை இலக்கிய வட்டமும் எழு கலை இலக்கியப் பேரவையும் இணைந்துநடத்தும் இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதனின் மறைவை யொட்டிய ஒரு நினைவுப் பகிர்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, இணுவில் அறிவாலயத்தில் (கந்தசுவாமி கோயில் முன்பாக) இடம்பெறும்.

இணுவில் கலை, இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுரைகளை கவிஞர் நாக. சிவசிதம்பரம், செஞ்சொற் செல்வர் ஆறு. திரு முருகன், பேராசிரியர்களான க. தேவராஜா, வ. மகேஸ்வரன், சட்டத்தரணி சோ. தேவராஜா, இணுவை துரை எங்கரசு, கை. சரவணன், ராதேயன், ந. மயூரரூபன், நா. யோகேந்திர நாதன், ந. ஞானசூரியர் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ

# பிற்போடப்பட்டது கலாசார விழா

யாழ்ப்பாணம், நவ. 16

இன்று வெள்ளிக்கிழமை குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டிருந்த யாழ்ப்பாண பிரதேச கலாசார விழா தற்போதைய அசாதாரண காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பொ. தயானந்தன் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். (இ

# 'ஆஸியில் உயர் கல்வி' தொடர்பில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 16

நல்லூர் பாரம்பரிய றோட்டறக் கழகம் மற்றும் தேம்ஸ் சர்வதேச கல்விக்கழகம் இணைந்து 'ஆஸ்திரேலியாவில் உயர் கல்வி வாய்ப்புகள்' தொடர்பில் அறிவுரைகள் வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை யாழ்ப்பாணம் அச்சுக்கூடவீதியில் அமைந்துள்ள கிறீன்பீல்ட் மண்டபத்தில் (யாழ் மரியன்னை பேராலயம் அருகில்) இந்நிகழ்வு இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ

# ரோஹன விஜயவீரவின் பெயர் சொல்ல வீரவன்ஸவுக்குத் தகுதியே கிடையாது

## விஜித ஹேரத் எம்.பி. பாய்ச்சல்



கொழும்பு, நவ. 16

அரசியல் தேவைக்காக கடந்த அரசில் பாரிய நிதி மோசடிகளைச் செய்த விமல் வீரவன்ஸவுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் ரோஹன விஜயவீரவின் பெயரைச் சொல்ல எவ்வித தகுதிகளும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

சட்டத்தில் தண்டிக்கப்பட வேண்டிய ஊழல்வாதிகள் முறையற்ற அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளை பெற்று நாடாளுமன்றத்தில் அநாகரிகமான முறையில் நடந்து சர்வதேசத்தின் மத்தியில் கேலிப் பொருளாக நாடாளுமன்றத்தை மாற்றியமைத்து விட்டனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களினால் நிராகரிக்கப்பட்ட அமைச்சரவையினால் தொடர்ந்து செயற்பட முடியாது என்ற அடிப்படை அரசியல் தெளிவில்லாமல் நாடாளுமன்றத்தில் அடாவடித்தனமாக ஆட்சியமைக்க முயற்சிக்கும் மஹிந்த தரப்பினரின் செயற்பாடுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கது – என்றார். (ஐ

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என் பெயர் குறிப்பிட்டு விசாரித்தார். 'Hats off to you' (ஹட்ஸ் ஒவ் டு யூ) என்று விதந்துரைத்துப் பாராட்டினார். எனக்கு விளங்கவில்லை. ஏன் இந்தப் பாராட்டு என்றேன். அவர் கூறிய விளக்கம் இன்று வாசகர்களுக்கு சமர்ப்பணம்.

*"நேற்றும் இன்றும் (புதன் கிழமையும், வியாழக்கிழமையும்) நாடாளுமன்றத்திலும் வெளியிலும் இடம் பெறும் சகல விடயங்களையும் நேரிலும், உங்களது போன்ற பத்திரிகைகள் மூலமும், பிற ஊடகங்கள் வாயிலாகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன்.'*

*"இன்று வியாழக்கிழமை பத்திரிகைகளில், முதல்நாள் புதனன்று நாடாளுமன்றத்தில் மஹிந்த தரப்புக்கு எதிராக நிறைவேற்றப் பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றிய விடயங்களே பெரும்பாலும் தலைப்பு மற்றும் பிரதான செய்திகளாக இருந்தன. உங்களைப் போன்ற மூத்த ஊடகவியலாளர்கள் பலர் இருக்கும் உங்கள் பத்திரிகை அவை பற்றிய செய்திகளை விலாவாரியாகப் பிரசுரித்திருந்த போதிலும், அதையும் தாண்டி அடுத்த கட்ட விடயம் ஒன்றையே பிரதான தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்திருந்தது. 'மீளநம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்குமாறு மைத்திரி ஆலோசனை' என்று அடுத்த கட்ட விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தது உங்கள் பத்திரிகை. ஆனால், ஜனாதிபதி அப்படி ஆலோசனை கூறியிருக்கின்றார் – இணக்கத்துக்கு வந்திருக்கின்றார் – என்ற செய்தியை வேறு எந்தப் பத்திரிகைகளிலும் என்னால் பார்த்தறிய முடியவில்லை.*

*"ஆனால் இன்றிரவு (வியாழன் இரவு) ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது நீங்கள் இன்று (வியாழன்) காலை உங்கள் பத்திரிகைப் பதிப்பில் குறிப்பிட்ட அதே ஆலோசனையை – அப்படியே – கனகச்சிதமாக – ஜனாதிபதி வெளிப்படுத்தினார் எனத் தெரிய வந்தது. அதை அறிந்து ஆச்சரியப் பட்டுப் போனேன்."*

*"நீங்கள் உங்கள் செய்தியில் ஏற்கனவே குறிப்பிட்டபடி புதனன்று நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தம்மையும், தமது அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களையும் தவறாகச் சாடியிருக்கும் வாசகங்களை நீக்கிவிட்டு உரிய வடிவத்தில் சரியான பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றித் தாருங்கள், நான் அப்படி நடவடிக்கை எடுக்கிறேன் என்று ஜனாதிபதி இன்றிரவு (வியாழன் இரவு) கூட்டத்தில் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார். அதை நேரத்துடன் வெளியிட்ட உங்கள் பத்திரிகைக்கு எனது பாராட்டுக்கள். 'Hats off to you and your team.' தொடர்ந்து எழுதுங்கள்"* – என்றார் அந்தத் தலைவர்.

இத்தகையோரின் பாராட்டுதாம் எமது ஊடக அணிக்கு டொனிக்!

-மின்னல்-

## அதி உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாபீடத்தைச் சுற்றிவளைத்து, சபாநாயகர்மீது தாக்குதல் நடத்துவதற்கு மஹிந்தவின் சகாக்கள் முற்பட்டவேளை, ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்களும் சபாபீடத்தை நோக்கிப்படையெடுத்து வந்தனர்.

இதையடுத்து இரு தரப்பினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டு, நாடாளுமன்றம் போர்க் களமாகக் காட்சிதந்தது.

### உச்சகட்ட பாதுகாப்பு இராஜதந்திரிகள் வருகை

பெரும் அரசியல் பரபரப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. வழமைக்கு மாறாக நாடாளுமன்ற வளாகத்திலும், நாடாளுமன்றத்துக்குள்ளும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

சபைஅமர்வைப் பார்வையிடுவதற்காக அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வருகைதந்திருந்தனர்.

சபையின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர் கருஜயசூரிய –

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது. எனவே, சபைக்குள் பிரதமர் என்று எவரும் அமரமுடியாது என்று இடித்துரைத்தார்.

இதனால், கொதிப்படைந்த மஹிந்த அணியினர், சபாநாயகரின் அறிவிப்பை ஏற்க மறுத்த தமையுடன், ஜனாதிபதியால் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும் சுட்டிக் காட்டினர்.

### கடுப்பாகிய மஹிந்த கடுந்தொனியில் உரை

இதையடுத்து தன்னைப் பிரதமர் எனக் கூறிக்கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்ற ஆரம்பித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் என அனைத்துப் பதவிகளையும் நான் வகித்துள்ளேன். எனவே, எனக்கு பதவி முக்கியமில்லை. நாடு அபாயத்தை நோக்கிப் பயணிப்பதை தடுக்கவே, ஜனாதிபதியின் கோரிக்கையின் பிரகாரம் பதவியேற்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் விசுவாசமானவராகவே சபாநாயகர் செயற்படுகின்றார். நாடாளுமன்ற வரலாற்றில் நேற்றுதான் இருண்ட நாள். – என்று ஆவேசம் பொங்க உரையாற்றினார்.

அத்துடன், எரிபொருட்களின் விலை இன்று (நேற்று) நள்ளிரவு முதல் மீண்டும் குறைக்கப்படும் என அறிவித்த மஹிந்த, ஐக்கிய தேசியக் கட்சி மீதும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஐ.தே.க. எம்.பிக்களும் கருத்துக்களை முன்வைத்தனர்.

### மஹிந்தவின் உரைமீது வாக்கெடுப்பு வேண்டும்

பெரும் கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் மஹிந்தவின் உரைநிறைவுக்குவந்தகையோடு, அவரின் உரை மீது நம்பிக்கையில்லை. எனவே, வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை லக்ஸ்மன் கிரியல்ல முன்வைத்தார்.

இதையடுத்து வாக்கெடுப்பு நடத்துவதற்கு சபையின் அனுமதியை சபாநாயகர் கோரினார். அவ்வேளையிலேயே அமளிதுமளி உக்கிரமடைய ஆரம்பித்தது. எதிரணி பக்கம் அமர்ந்திருந்த எம்.பிக்கள் எழுந்து நின்று, லக்ஷ்மன் கிரியல்லவின் யோசனையை வழிமொழிந்தனர்.

### எழும்ப மறுத்த சிவசக்தி சபாபீடம் முற்றுகை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் எழுந்து நின்று வாக்கெடுப்பு கோரினாலும், சிவசக்தி எம்.பி. மட்டும் தனது ஆசனத்திலிருந்து எழும்ப வில்லை. அவரை எழுப்புவதற்கு துரைரட்ணசிங்கம் எம்.பி. முயற்சித்தாலும், அதற்கு சிவசக்தி எம்.பி. இணங்கவில்லை.

மஹிந்தவின் உரைமீது வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஆளுங்கட்சி பக்கம் அமர்ந்திருந்த மஹிந்த, மைத்திரி அணியினர் போர்க்கொடி தூக்கினர். எனினும், பெயர்கூவி வாக்கெடுப்பு நடத்துவதற்குரிய கட்டளையை சபாநாயகர் பிறப்பிக்க முற்பட்டதால் மஹிந்த அணியினர் சினம்கொண்டனர்.

இருக்கைகளிலிருந்து எழுந்து சபாபீடத்தை நோக்கிவந்து, சபாபீடத்தையும், சபாநாயகரையும் சுற்றிவளைத்தனர்.

சபாநாயகரைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்களும் சபாபீடத்தை நோக்கிவந்தனர்.

### சபாபீடம் முற்றுகை சபாநாயகரை தாக்க முயற்சி

இதனால் சபைக்குள் பதற்ற நிலை உச்சம்தொட்டது. படைக்கல சேவிதர், செங்கோலைத் தூக்கிச் சென்றார். சபாநாயகரை கடுமையாகத் திட்டிய மஹிந்த அணியினர், சபாபீடத்திலிருந்த ஆவணங்களைக் கைப்பற்ற முயற்சித்தனர். அதை ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள் தடுத்தனர். இதையடுத்தே கருத்துமோதல், அடிதடிவரை சென்றது.

இருதரப்பினதும் பின்வரிசை எம்.பிக்கள் முட்டிமோதிக்கொண்டனர். உதயபத்மசாந்த, ரோகித அபேகுணவர்தன, சிசிர ஜயக்கொடி, மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணவீர, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ திலும் அமுனுகம உள்ளிட்ட மஹிந்த அணி எம்.பிக்கள், முஷ்டியை முறுக்கிக்கொண்டு, சபைக்குள் சண்டியர்கள்போல் செயற்பட்டனர்.

மங்கள சமரவீர, நவீன் திஸாநாயக்க, தயாகமகே, ரஞ்சன் ராமநாயக்க போன்ற ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள், சபாநாயகரை சூழ்ந்துக்கொண்டு அவரைப் பாதுகாத்தனர். ஹரின் பெர்னான்டோ, முஜிபூர் ரஹ்மான், மரிக்கார் போன்ற எம்.பிக்கள் மஹிந்த அணியுடன், நேருக்குநேர் சொற்போரில் ஈடுபட்டனர்.

### சமசர முயற்சியில் மூத்த உறுப்பினர்கள்

இந்நிலையில் சஜித் பிரேமதாச, ரவிகருணாநாயக்க, ரிஷாத் பதியூதின், பந்துல குணவர்தன உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள், அவைக்குள் அமைதியை ஏற்படுத்துவதற்காக இரு தரப்பு எம்.பிக்களையும் சமரசப்படுத்தும் முயற்சியில் இறங்கினர். எனினும், கூச்சல், குழப்பம் ஓயவில்லை.

சபாநாயகருக்கு முன்பிருந்த ஒலிவாங்கியை திலும் அமுனுகம எம்.பி. உடைத்து வீசினார். இதனால், அவருக்குக் காயம் ஏற்பட்டது.

அத்துடன், சபாநாயகரை நோக்கி குப்பைவாளி வீசப்பட்டதுடன், தண்ணீர்போத்தலும் வீசப்பட்டது. கோவைகளும்தூக்கி வீசப்பட்டன. தூஷண வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

பதற்றநிலை உச்சம் தொட்டதால், 10.45 மணியளவில் சபாபீடத்தைவிட்டுச் சபாநாயகர் வெளியேறினார். நாடாளுமன்றமும் 21 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

சபாநாயகரை தாம் வெளியேற்றிவிட்டோம் என சபைக்குள் மஹிந்த அணி கோஷம் எழுப்பி, வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டது. ரணில் கள்ளன் என மஹிந்தவின் சகாக்களும், மஹிந்த கள்ளன் என்று ரணிலின் சகாக்களும் குரல் எழுப்பினர்.

சபாபீடமானது மோதல் களமாக மாறி, எம்.பிக்கள் முட்டிக்கொண்டாலும் மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்கள் தமது ஆசனங்களிலிருந்து ஓர் அடியேனும் நகரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜே.வி.பி ஆகியவற்றின் எம்.பிக்கள், சபைக்குள் அரங்கேறும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அதிஉயர் சபையாக கருதப்படுகின்ற, பார்க்கப்படுகின்ற நாடாளுமன்றமானது சில எம்.பிக்களின் நடவடிக்கையால், கேலிக்கூத்துச் சபையாகவும், மோதல் களமாகவும் மாறியுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். – என்றார். (ஐ

# அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பது மைத்திரியின் பொறுப்பு

## கூறுகிறார் மரிக்கார் எம்.பி.

கொழும்பு, நவ. 16

**அரசியல் நெருக்கடிக்கு காரணமாகவிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினாலேயே அதற்குத் தீர்வு காணப்படவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.**

**நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை யாருக்கு என்பது தொடர்பிலேயே தற்போதைய நெருக்கடி தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறாக நாடாளுமன்றத்தில் தொடரும் அநாகரிகமான செயற்பாடுகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் வெட்கப்படுகின்றேன்.

ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமையவே இந்த அரசியல் நெருக்கடி நிலை தோற்றம் பெற்றது. எனவே, இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

நாம் நியமித்த ஜனாதிபதியினால் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள அராஜக நிலையானது, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளதுடன், உலக நாடுகளின் மத்தியில் இலங்கை நாடாளுமன்றத்தை குறைமதிப்புக்கும் உட்படுத்தியுள்ளது.

எனவே ஜனாதிபதியே! நீங்கள் ஆரம்பித்து வைத்த பிரச்சினையை நீங்களே தீர்த்து வையுங்கள்– என்றார். (ஐ)

# மைத்திரியின் தேர்தல் கனவினால் சதி வலையில் வீழ்ந்தார் மஹிந்தர்

## விசனத்துடன் ஆதங்கப்படுகிறது ஜே.வி.பி.



கொழும்பு,நவ.16

சில சதிகாரர்களின் வலைகளில் மஹிந்த ராஜபக்ஷ சிக்கிக்கொண்டார் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும். தாம் போட்டியிட வேண்டுமென்ற ஆசையில், மஹிந்தராஜபக்ஷவைப்பலிகொடுத்துள்ளார் என்றும், ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மைத்திரி – மஹிந்த கூட்டணியின் சர்வாதிகார போக்கினை தோற்கடித்து ஜனநாயகத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் எடுத்த முயற்சியில் வெற்றி பெற்றுள்ளோம். ரணிலை பிரதமராக்க வேண்டும் என்ற எந்த நோக்கமும் எமக்கு இல்லை.

அரசமைப்பினை மீறியமைக்கவோ அல்லது மனநிலை சரியில்லை எனத் தெரிவித்தோ ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையை நாம் கொண்டுவர முடியும். ஆனால் அந்த நிலைமைக்கு இன்னமும் நாம் வரவில்லை. ஆகவே இப்போதாவது ஜனாதிபதி நிலைமைகளை சரியாக விளங்கிக் கொண்டு ஜனநாயகத்துக்கு இடமளிக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவும் அவரது கூட்டணியும் வலுக்கட்டாயமாக ஆட்சியைக் கைப்பற்றி சர்வாதிகாரப் போக்கில் செயற்பட ஆரம்பித்ததை அடுத்தே நாம் அனைவரும் நீதிமன்றம் செல்லத் தீர்மானம் எடுத்தோம். எனினும் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேர்மையாகத் தனது கடமையைச் செய்தார் என்பதை நாம் கூற வேண்டும். – எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மொட்டுச் சின்னமும் அழிந்தது சுதந்திரக் கட்சியும் முடிந்தது!

## குமார வெல்கம பெரும் விசனம்



மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தாங்கள் அனைவரும் எதிரிகளின் சதி வலையில் மீளமுடியாமல் தவிக்கின்றனர் என முன்னைய கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாம் வேண்டாம் என்று கூறிய போதும், சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செய்த செயலினால் சில ஆண்டுகளாக கடின உழைப்பில் உருவாக்கிய தாமரை மொட்டு சின்னமும் அழிந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முடிந்தது. அரசாங்கமும் இல்லை, நாமும் முடிந்தோம். நாம் அனைவரும் எதிரியின் சதி வலையில் சிக்கி விட்டோம். இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சில தலைவர்கள் பொறுப்புச் சொல்ல வேண்டும்.– என்று கடும் தொனியில் குமார வெல்கம திட்டித் தீர்த்துள்ளார்.

# நாடாளுமன்றத்தை மீள முடக்க மைத்திரிக்கு மஹிந்தர் அழுத்தம்

கொழும்பு,நவ.16


நாடாளுமன்றத்தை மீண்டும் ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மஹிந்த ராஜபக்ஷ அழுத்தம் கொடுத்துள்ளார் என ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான இறுதித் தீர்ப்பு கிடைக்கும் வரை மீண்டும் நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்குமாறு மைத்திரியிடம் மஹிந்த, கோரியுள்ளார்.

எனினும் இந்த நேரத்தில் அவ்வாறான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளாமல் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் ஆலோசகர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மீண்டும் நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளதாக சட்டத்தரணி விஜேநாயக்க பிபிசி செய்தி சேவையிடம் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.கவின் பேஸ்புக் முடக்கம்




கொழும்பு, நவ. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகப்பூர்வ பேஸ்புக் வலைத்தளமானது நேற்று முன்தினம் மாலையிலிருந்து முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த பேஸ்புக் பக்கத்தில் பேஸ்புக் நிறுவனத்தின் சட்டதிட்டங்களை மீறியுள்ளதால் இரண்டு நாள்களுக்கு இவ்வாறு முடக்கப்பட்டுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைக்குப் புறப்பட்ட மாணவியைக் காணவில்லை

## மட்டு. மயிலம்பாவெளியில் சம்பவம்

மட்டக்களப்பு, நவ.16

மட்டக்களப்பு – மயிலம்பாவெளி சவுக்கடியைச் சேர்ந்த 11 வயது சிறுமி ஒருவர் நேற்றுக் காலை வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்பட்டுச்சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சவுக்கடியைச் சேர்ந்த ஜேசுதாஸ் ஜென்சிசா என்ற சிறுமியே காணாமல் போயுள்ளார்.

மட்டக்களப்பு – மயிலம்பாவெளி சவுக்கடியைச் சேர்ந்த 11 வயது சிறுமி ஒருவர் நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். சவுக்கடியைச் சேர்ந்த ஜேசுதாஸ் ஜென்சிசா என்ற சிறுமியே காணாமல் போயுள்ளார்.

இந்தச் சிறுமி சவுக்கடியிலுள்ள தனது வீட்டில் இருந்து மயிலம்பாவெளியிலுள்ள விபுலானந்தர் பாடசாலைக்கு நேற்றுக் காலை 7.00 மணிக்கு துவிச்சக்கரவண்டியில் சென்றிருந்தார். பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை முடிவடைந்தும் அவர் வீடு திரும்பாதமையையடுத்து பெற்றோர் அவரைத் தேடிச் சென்றனர். இருந்தபோதும் அந்தச் சிறுமி பாடசாலைக்கு வரவில்லை எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சிறுமி துவிச்சக்கரவண்டியுடன் காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாமே பிரதமர் என்ற மனநோயுடன் அலைவோருக்குச் சிகிச்சை தேவை

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, நவ. 16

தாமே பிரதமர் எனக் கூறும் மனநோய் பிடித்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டும் என, புத்தசாசன, சமய அலுவல்கள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் அரசியல் குழப்ப நிலைக்கு மத்தியில் புத்தசாசன, சமய அலுவல்கள் அமைச்சர் உதய கம்மன்பில கடந்த செவ்வாய்கிழமை மாலை கண்டிக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பின், மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசிபெற்றார். அதனைத் தொடர்ந்து அஸ்கிரிய வராகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் மத்தியில் சென்றால் பாரிய தண்டனைக் கிடைக்கும் என்று இவர்களுக்கு தெரியும். கடந்த நான்கு வருடங்களில் நாட்டிற்கும், இராணுவத்தினருக்கும். தேசிய சொத்துக்களுக்கும், பொருளாதாரத்துக்கும், வறுமையில் வாழும் மக்களுக்கும் இவர்கள் செய்த துரோகங்களுக்குத் தண்டனைக் கொடுக்க மக்கள் காத்திருக்கிறனர்.

இதற்கு அஞ்சியே அவர்கள் அழுது நீதிமன்றத்தை நாடியுள்ளனர். நாட்டில் இதுவரை காலமும் உத்தியோகபூர்வமான பிரதமரைத் தவிர, நானே பிரதமர் எனக் கூறிக் கொண்ட சிலர் மனநல வைத்தியசாலையிலேயே இருந்தனர்.

அந்த மனநல வைத்தியசாலையின் தடுப்புச் சுவர் உடைந்துவிட்டதா என எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இன்று பல இடங்களில் நான் தான் பிரதமர், நான் தான் அமைச்சர் எனக் கூறிக்கொண்டு சிலர் அலைகின்றனர்.

அவர்களைக் குணமாக்கவேண்டியது, அவர்களது உறவினர்களின் பொறுப்பு. அவர்களின் நோய் அவர்களுக்குத் தெரியாது. எனவே மற்றையவர்கள்தான் அவர்களை அழைத்துச் சென்று குணமாக்க வேண்டும்.

எமக்கு யாரும் சவாலானவர்கள் அல்லர். இந்த நாட்டு மக்களின் தேவை அறிந்து அவர்களுடன் இருக்கும் எமக்கு வேறு யாரும் எங்கிருந்து வந்தாலும் எமக்குச் சவால் இல்லை.

டொனால்ட் ட்ரம்ப், பராக் ஒபாமா என யாரையும் இங்கு வந்து போட்டியிடச் சொல்லுங்கள். நாங்கள் வெற்றி பெற்றுக் காட்டுவோம்–என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## குளறுபடிகளுக்குக் காரணம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் கடந்த 26 ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லவே இல்லை என்பது பளிங்குபோல மிகத் தெளிவாக – அப்பட்டமாக – வெளிப்பட்டு நிற்கின்றது.

கடந்த புதனன்று நாடாளுமன்ற அமர்வில் அது அம்பலமாகி, வெளிப்படையான பின்னரும் தாம் பிரதமராகவும் தமது அரசு தொடரவும் கங்கணம் கட்டி நிற்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

தான் நியமித்த பிரதமரும் பெரும்பான்மை ஆதரவு பெறாத அவரின் சிறுபான்மை அரசும் அதிகாரத்தில் தொடர்வதற்கு முழு அளவில் முண்டு கொடுத்து நிற்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அப்படி அந்த அரசு தொடர்வதற்கு அவர் கூறும் காரணம் மிகவும் வியப்பானது; விசித்திரமானது.

*"2015 ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் 41 எம்.பிக்களை மட்டும் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவைத்தான் பிரதமராக்கினேன். அவர் அந்த அரசின் எஞ்சிய காலம் முழுவதும் பிரதமராகப் பதவி வகித்தார். அப்போது யாரும் அவரை நாடாளுமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தவில்லை, நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் காட்டும்படி கோரவில்லை"* – என்று சுட்டிக்காட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போது மட்டும் அதற்கு மாறாக ஏன் நடக்க முற்படுகின்றீர்கள் என்றும் கேள்வி எழுப்புகின்றார்.

அத்தோடு நாடாளுமன்றத்தில் அதிகபட்ச நம்பிக்கை – அல்லது ஆதரவைக் கொண்டுள்ள – நாடாளுமன்ற உறுப்பினர் எனத் தாம் கருதும் ஒருவரைப் பிரதமராக நியமிப்பதற்கான சட்ட அதிகாரம் தமக்கு உள்ளது என்றும் –

அதைப் பிரயோகித்து மஹிந்த ராஜபக்ஷவைத் தாம் பிரதமராக நியமித்தமையை, அரசமைப்பை மீறிய செயலாகக் காட்ட முயல்வது தவறு என்றும் குறிப்பிடும் ஜனாதிபதி, அப்படிக் காட்டும் விதத்திலான தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையாக எனக்குத் தெரிவிப்பதன் மூலம், சபாநாயகர் தவறிழைத்துள்ளார் என்றும் குறிப்பிடுகின்றார்.

2015 இல் 41 எம்.பிக்களை மட்டும் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கிய போது அவரது பிரதமர் பதவியை யாரும் சவாலுக்கு உட்படுத்தவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பிக்கள் பலரும் அதுவரையும் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவைக் கைகழுவி விட்டு, புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன– புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டை ஆதரித்தனர். அதனால் அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தைத் திரட்ட முடியவில்லை.

ஆனால், இங்கு, இப்போது நிலைமை வேறு. நாடாளுமன்றப் பெரும்பான்மை தெட்டத்தெளிவாக – உறுதியாக – ரணில் விக்கிரமசிங்க பக்கம் உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் அமர்வதற்கு எதிராகப் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி, அவரின் பதவியை சவாலுக்கு உட்படுத்தியிருக்கின்றனர்.

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறக்கூடியவர் எனத் தாம் கருதும் ஒருவரைப் பிரதமராக ஜனாதிபதி நியமிக்க முடியும்'– என்ற சட்ட ஏற்பாட்டை ஜனாதிபதி தம்மிஷ்டப்படி – தம் விருப்பப்படி – தம்போக்குக்கு – ஏற்ப பயன்படுத்த முடியாது.

தாம் பிரதமராக நியமித்தவர் – நியமிப்பவர் – நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறாதவர், பெறமுடியாதவர் என்பது உறுதியான பின்னரும், தமது நியமனத்தை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது, உட்படுத்தக்கூடாது என்ற சாரப்பட ஜனாதிபதி பிடிவாதம் பிடிப்பது வெறும் அபத்தமாகும்.

அப்படிப் பிடிவாதம் பிடித்து, நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறாதவரை பிரதமராக நியமித்து, பெரும்பான்மை இல்லாத – நாடாளுமன்றில் பெரும்பான்மையினரால் எதிர்க்கப்படுகின்ற – ஒருவரை பிரதமர் பதவியில் தொடர்வதற்கு ஜனாதிபதியும் சேர்ந்து ஊக்குவித்து நிற்பது ஜனநாயகப் பேரழிவு நடவடிக்கை அன்றி வேறில்லை.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை – பெரும்பான்மைப் பலத்தை புறமெதுக்கி – தம்பாட்டில், தமது தேவைக்கும் – விருப்புக்கும் ஏற்ப அரசியல் குளறுபடி நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்க முற்பட்டமையே இவ்வளவு அரசியல் நெருக்கடியும் தோன்றக் காரணமாகும்.

சிறுபான்மை மக்களின் கட்சிகளும், பிற பிரதான கட்சிகளும் விலை போகாமல் ஒன்றுபட்டு நின்று ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்குச் சரியான பாடம் கற்பித்துள்ளன என்பது பாராட்டத்தக்க அம்சமாகும்.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு ரவூப் ஹக்கீம் நேரடிச் சவால்

## கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் திரண்ட மக்கள் கூட்டத்தின் மத்தியில் விடுத்தார்



கொழும்பு,நவ.16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் துணிச்சல் இருந்தால், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அதில் போட்டியிட்டு வெற்றிபெற்றுக் காட்டட்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சவால் விடுத்தார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியில் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றி ரவூப் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர், உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றிருக்கலாம். ஆனால், சட்டத்துறையில் போதிய தெளிவில்லாத பாமர சட்டத்தரணிகளின் பேச்சைக் கேட்டு நாடாளுமன்றத்தை அவரசரப்பட்டுக் கலைத்து விட்டார். அவர் இப்போது பின்நோக்கிச் செல்லமுடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றில. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினரின் ஆதரவின்றி நான்கரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாது. அப்படியிருந்தும் ஜனாதிபதிக்கு அரசமைப்பில் இன்னுமொரு வாய்ப்பு இருக்கிறது. அதாவது, ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாகும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு துணிச்சல் இருந்தால், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் போட்டியிட்டு வெற்றிபெற்றுக் காட்டுங்கள் என்று நான் சவால் விடுக்கிறேன். அதில் எங்களது பலத்தை நிரூபித்து, மக்கள்பலம் என்னவென்பதை நாங்கள் உங்களுக்குக் காட்டுகிறோம்.

எனது 25 வருட அரசியல் வாழ்க்கையில் இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் மிகவும் கீழ்த்தரமான காட்சிகளைக் கண்டேன். தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்கத் திராணியற்ற மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்து, அடித்து ஆட்சியைப் பெறுமாறு தனது சகாக்களை ஏவிவிட்டு விட்டு மெதுவாக நழுவிச் சென்றார்.

நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றும்போது, மக்களது இறைமையை மதித்து பொதுத் தேர்தலை நடத்துமாறு கூறினார். நாங்கள் சொல்கின்றோம், மக்கள் இறைமையைப் பாதுகாக்க வேண்டுமானால் முதலில் நடத்த வேண்டியது ஜனாதிபதித் தேர்தலாகும். பொதுத் தேர்தலுக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மக்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால், நாட்டில் அரசியல் பிரச்சினையொன்றுக்கு வழிசமைத்து, ஜனநாயகத்துக்கு விரோதமாக செயற்பட்ட காரணத்தினால் மெதமுலான மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் இலகுவாகக் காவு கொள்ளலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், எங்களின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உங்களிடம் பறிகொடுக்காமல் பாதுகாத்துக் கொள்ள முடிந்தமைக்கு பெருமைப்படுகிறோம்.

இந்த நாட்டிலே 9 ஆண்டுகளாக நடைபெற்ற கொடூர ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்கு மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆணையைப் பாதுகாத்துள்ளோம். ஜனநாயகத்துக்கு விரோதமான ஜனாதிபதியின் செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்பதையும் தெளிவாக சொல்லிக்கொள்கிறோம். – என்றார்.

# உயர்நீதிமன்றின் இடைக்காலத் தடை உத்தரவால் ஜனநாயகம் மீதான நம்பிக்கை துளிர் விட்டுள்ளது

## முன்னாள் கிழக்கு மாகாண முதல்வர் நஸீர் அஹமத்

கொழும்பு, நவ.17

நாடாளுமன்றத்தை கலைத்தமை தொடர்பான ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்தமையே ஜனநாயக நம்பிக்கையைத் துளிர்விட வைத்து உயிரூட்டியது என கிழக்கு மாகாண முன்னாள் நஸீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயக விழுமியங்களை மீறிய இலங்கை அரசியலின் நிலைமைகள் அடிமட்ட பாமர மக்களால் கூட மோசமாகப் பேசப்படும் அளவுக்கு தரந்தாழ்ந்து போய்க்கொண்டிருந்த நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஜனநாயகத்துக்கு ஓர் உயிர்ப்பைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதி மேற்கொண்ட தவறான நகர்வை மூடிமறைப்பதற்காகத் தொடர்ந்தும் தவறான வழிமுறைகள்முன்னெடுக்கப்பட்டு வந்தமையை அனைவரும் அருவருப்போடுதான் அவதானிக்க நேர்ந்தது.

மக்கள் பிரதிநிதிகளைப் பணம் கொடுத்து, பதவி கொடுத்து, வாங்கித் தத்தமது பெரும்பான்மையை நிரூபித்துவிடலாம் என்ற முனைப்புகளும் தொடர வழிபிறந்துள்ளது.

இத்தகைய நிலைமைகள் தொடர்ந்தால் அவை எதிர்கால ஜனநாயக அரசியலில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

எனவே, தற்போதைய அரசியல் சதிராட்ட நிலைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இலங்கையின் இழிவான அரசியல் போக்குகளால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் உயர் நீதிமன்றமும் கூட பெரும் சவால்களைச் சந்தித்துள்ள தருணம் இது.

அதுமட்டுமின்றி சர்வதேச நாடுகள் கூட இலங்கை அரசியலில் நேரடியாக தலையீடு செய்ய ஆரம்பித்துள்ளன.

எனவே, இத்தருணத்தில் ஜனநாயகத்தின் மீது முழு நம்பிக்கை வைத்து இலங்கையில் இனப் பாகுபாடற்ற சட்டவாட்சியைக் கொண்டு வரு வதற்கு ஜனநாயகவாதிகளும் ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்களும் ஒரு மித்துப்பாடுபட வேண்டும்.

இனவாதமற்ற அரசியல் நோக்கும் இனவாத அரசியல் வழிபாடும் களைந்தெறியப்பட வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது"

- கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

## நாளை

17.11.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: சதயம் பி.ப.1.32 வரை
திதி : நவமி கா.10.16 வரை
சுபநேரம் : 3.08 – 4.38 வரை
இராகுகாலம் : 9.08 – 10.38 வரை

# அரசமைப்பையும் நாடாளுமன்றச் சம்பிரதாயங்களையும் சபாநாயகர் மீறிவிட்டார் என்று ஜனாதிபதி குற்றச்சாட்டு

## கரு ஜயசூரியாவின் கடிதத்துக்கு மைத்திரி உடனடியாகப் பதிலடி

அரசமைப்பையும் நாடாளுமன்றச்சம்பிரதாயங்களையும் சபாநாயகர் மீறி நடந்திருக்கின்றார் என்ற சாரப்பட அவருக்கு நேற்று முன்தினம் இரவு தாம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் குற்றம் சுமத்தி யிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பாக 122 எம்.பிக்களின் ஒப்பத்துடன் கூடிய கடிதம் ஒன்றை சபாநாயகர் கரு ஜயசூரிய நாடளுமன்ற அலுவலகத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்திருந்தார். அதற்கு உடனடியாகவே - நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் - தாம் அனுப்பிய பதில் கடிதத்திலேயே சபாநாயகர் மீது இவ்வாறு குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு ஜனாதிபதியினால் அனுப்ப. வைக் கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:-









**கௌரவ கரு ஜயசூரிய அவர்கள்,**
**சபாநாயகர்,**
**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நாடாளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை.**

**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

2018 நவம்பர் 14 ஆம் திகதிய நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக தங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் மற்றும் அதன் இணைப்புகள் தொடர்பில் எனது கவனத்தைச் செலுத்தினேன்.

முதலாவதாக நாடாளுமன்றம் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள தங்களது செயற்பாடுகள் இந்த வழக்கின் தீர்ப்பிற்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியனவாக அமையும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தங்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல், அரசமைப்பின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே என்னால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று முன்வைக்கப்பட வேண்டிய முறை மற்றும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அரசமைப்பிலும் நிலையியற் கட்டளைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அரசமைப்பு, நிலையியற் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாது நீங்கள் செயற்பட்டுள்ளீர்கள் என்பது தெளிவாகின்றது.

அரசமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதமர் ஒருவரை நியமிக்கும் வேளையில், எனது கருத்திற்கு அமைவாக நாடாளுமன்றத்தில் அதிகபட்ச நம்பிக்கையினைக் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பிரதமராக நியமிப்பதற்கான சட்ட ஏற்பாடு காணப்படுவதுடன், பிரதமருக்கு அல்லது அரசாங்கத்திற்கு பெரும்பான்மை காணப் படுகின்றது என்பதையோ அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நாடாளுமன்ற சம்பிர தாயமோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் நாடாளுமன்றத்தினால் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்படாத கையொப்பங்கள் அடங்கிய ஆவணமொன்றினை எனக்கு அனுப்பி வைத்ததன் ஊடாக குறித்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துவதற்குத் தங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி தொடர்பிலும் நான் கவலையடைகின்றேன்.

அவ்வாறே, 2015 ஜனவரி 09 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைப் பிரதிநிதித்துவம் செய்த கௌரவ டி.எம். ஜயரத்னவிற்கு சார்பாக நாடாளுமன்றத்தில் 162 ஆசனங்கள் காணப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு நாடாளுமன் றத்தில் 41 ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களை, நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சியின் வேண்டுகோளுக்கு அமைவாக நியமித்தேன் என்பதையும் நினைவுறுத்துகின்றேன்.

என்னால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் அரசமைப்பிற்கு உட்பட்டனவா என்பதை நிர்ணயம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் முயற்சித்தலானது, அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள பிரத்தியேக மற்றும் அதற்கே உரித்தான அதிகாரங்களை மீறிச்செயற் படும் நடவடிக்கையாகும் எனவும் அதனூடாக நீங்கள் அரசமைப்பு தொடர்பில் உரியவாறு கவனம் செலுத்தவில்லை என்பதும் தெளிவாகின்றது.

இறுதியாக சபாநாயகராக நியமிக்கப்படும் ஒருவர் எந்தவொரு அரசியல் கட்சியை பிரதி நிதித்துவம் செய்பவராக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பினும் மாட்சிமை மிக்க நாடாளுமன்றத்தின் கௌரவத்தையும் அதன் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை யும் பாதுகாப்பதற்காக சுயாதீனமாக செயற்பட வேண்டிய பொறுப்பினை வருத்தத்துடன், தங்களுக்கு ஞாபகப்படுத்த நேர்ந்துள்ளது.

தங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்குறித்த கடிதத்தில் முதலாவது பிரேரணையாக குறிப்பிடப்பட்டுள்ள விடயமாகிய குறித்த நியமனம் மற்றும் கட்டளை அரசமைப்பிற்கு எதிரானது எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரகடனத்தை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். குறித்த முதலாவது பிரேரணை தொடர்பில் நான் மேற்கொண்ட நடவடிக்கை அரசமைப்பிற்கு ஏற்புடைய, சட்ட ரீதியான தீர்மானமாகும். தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் அடங்கிய ஆவணத் தின் மூலப்பிரதியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட திகதி அழிக்கப்பட்டு அதன் மீது நவம்பர் 14 ஆம் திகதி என எழுதப்பட்டுள்ளது.

மேலும் அரசமைப்பிற்கு அமைவாக பிரதமர் ஒருவரை நியமிக்கும் பூரணமான அதி காரத்தைக் கொண்டுள்ள நியமிப்பு அதிகாரி ஜனாதிபதியே ஆவார் என்பதையும் தங்களுக்கு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இப்படிக்கு,**
**நம்பிக்கையுள்ள,**
**மைத்திரிபால சிறிசேன**
**ஜனாதிபதி**
**2018.11.14**

# சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் நீதிமன்ற உத்தரவுப்படி பெண்களுக்கு அனுமதி என கேரள அரசு அதிரடி அறிவிப்பு



உச்ச நீதிமன்ற உத்தரவின்படி சபரி மலை ஐயப்பன் கோவிலில் பெண்களை அனுமதிப்போம். இதற்கு எதிரான நிலைப்பாட்டை கேரள அரசு எடுக்க முடியாது என அந்த மாநில முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் மண்டல பூஜை மற்றும் மகரவிளக்கு பூஜைகள் மிகவும் பிரசித்திப் பெற்றவை.

மண்டல பூஜை, மகர விளக்கு விழாக் களின்போது ஐயப்பனை தரிசிக்க நாடு முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலை வருவது வழக்கம். இந்த ஆண்டு மண்டல பூஜை டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி நடக்கிறது.

இதற்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று மாலை 5 மணிக்கு திறக்கப் படுகிறது. அப் போது புதிய மேல்சாந்தி வாசுதேவன் நம்பூதிரி, மாளிகைபுரம் கோவில் மேல்சாந்தி நாராயணன் நம்பூதிரி ஆகியோர் 18 ஆம் படி ஏறி பதவி ஏற்றுக் கொள் கிறார்கள். இரவு 10 மணிக்கு நடை அடைக்கப்பட்டு கோவி லின் சாவி புதிய மேல்சாந்தியிடம் ஒப்படைக்கப்படுகிறது.

நாளை 17 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு ஐயப்பன் கோவில் நடை திறக்கப்படுகிறது. நடை திறந்ததும் ஐயப்பனுக்கு நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது.

அதிலிருந்து ஐயப்பனை தரிசிக்க பக்தர்கள் அனு மதிக்கப்படுவார்கள். நாளை முதல் 41 நாட்கள் தொடர்ச்சி யாக கோவில் நடை திறந்திருக்கும்.

டிசம்பர் 27 ஆம் திகதி மண்டல பூஜை விழா முடிந்த பின்பு கோவில் நடை அடைக்கப்படும். 3 நாட்களுக்கு பிறகு டிசம்பர் 30 ஆம் திகதி மகரவிளக்கு பூஜைக்காக நடை மீண்டும் திறக்கப்படும். ஜனவரி 14 ஆம் திகதி மகரவிளக்கு பூஜை நடக்கிறது. அதுவரை கோவில் நடை திறந்திருக்கும்.

மண்டல பூஜையை காட்டிலும் மகரவிளக்கு பூஜைக்கு அதிகமான பக்தர்கள் வருவார்கள்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் சபரிமலைக்கு இளம்பெண்கள் மற்றும் பெண்ணீய ஆர்வலர்கள் வர உள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

தரிசனத்துக்கும் பெண்கள் அதிகளவு வருவார்கள் என்று பொலிஸாரும் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், போராட்டக்காரர்களை சமா ளிக்கவும் இந்த முறை சபரி மலையில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, சபரிமலை செல்லும் அனைத்து பாதைகளும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள் ளன. சபரிமலைக்கு வரும் வாகனங்கள் அனைத்தும் பொலிஸாரிடம் முன் அனுமதி பெற்றே சபரிமலை செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பத்தினம் திட்டா, நிலக்கல், எரிமேலி, பம்பை என அனைத்து பகுதி களிலும் சோதனை சாவடிகள் அமைக் கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், சபரிமலையில் பெண் கள் தரிசனம் தொடர்பாக கேரள முதல மைச்சர் பினராயி விஜயன் தலைமையில் நெற்றுக் காலை அம்மாநிலத்தை சேர்ந்த அனைத்துக் கட்சி தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

சிலமணி நேரம் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கு பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பினராயி விஜயன், 'செப்டம்பர் 28 ஆம் திகதி இதுதொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுதான் இன்னும் நடைமுறையில் உள்ளது. அதாவது, தரிசனத்துக்கு பெண்களை அனுமதிக்க வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவாகும். இந்த உத்தரவுக்கு எதிராக எந்த நிலைப் பாட்டையும் கேரள அரசு எடுக்க முடியாது.

நாங்கள் பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக் கிறோம். ஆனால், நீதிமன்றின் தீர்ப்பை நடைமுறைப் படுத்தியே தீரவேண்டிய கட்டாயமும் அரசுக்கு உள்ளது.' – என தெரிவித்தார்.




## மண்டல பூஜைக்காக ஐயப்பன் கோவிலின் நடை இன்று மீண்டும் திறக்கப்படுகின்றது

### திரும்பவும் போராட்டம் வெடிக்குமா?

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கும் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், மண்டல பூஜைக் காக சபரிமலை கோயில் நடை இன்று திறக்கப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்ல 10 வயது முதல் 50 வயது வரையிலான பெண்களுக்கு அனுமதி இல்லை. இதை எதிர்த்து தொடரப் பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதி மன்றம், அனைத்து வயது பெண்களும் சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்லலாம் என்று கடந்த செப்டம்பர் 28ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் 17 ஆம் திகதி ஐப்பசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை திறக்கப்பட்டபோது சில இளம்பெண்கள் கோயிலுக்குச் செல்ல முயன்றனர். இந்து அமைப்பினரின் கடும் எதிர்ப்புக் காரணமாக அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். கடந்த 22ஆம் திகதி கோயில் நடை சாத்தப்பட்டது.

ஒரு பெண் கூட ஐயப்பனை தரிசிக்கவில்லை. இந்தப் பின்ன ணியில் சபரிமலை தீர்ப்பை எதிர்த்து மறுசீராய்வு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில், மண்டல பூஜைக்காக சபரிமலை கோயில் நடை இன்று மாலை திறக்கப்படுகிறது. பெண்கள் செல்ல எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடந்து வரும் நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்றது

இதில் காங்கிரஸ், பாஜக, முஸ்லிம் லீக் உள்ளட்ட கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். எதிர்கட்சித் தலைவர் ரமேஷ் சென்னிதலா, காங்கிரஸ் மாநில தலைவர் முல்லப்பள்ளி ராமச்சந்திரன், பாஜக மாநில தலை வர் ஶ்ரீதரன் பிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். அப்போது சபரிமலை கோயில் பாரம்பரியத்தை காக்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் எதிர்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மாநில அரசு நிறைவேற்றுவதாகக் கூட்டத்தில் முதல்வர் பினராயி விஜயன் கூறினார். ஆனால் இந்த விவகாரத்தில் கேரள அரசு பிடிவாதம் காட்ட வேண்டாம் என எதி ர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர். அப்போது பேசிய முதல்வர் பினராயி விஜயன் "உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு முழுமை யாக நிறைவேற்றும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. பெண்கள் அனுமதிக்க வேண்டும் என்பதை உச்ச நீதிமன்றம் மீண்டும் கூறியுள்ளதால் இதை அமல்படுத்த அரசு உறுதி பூண் டுள்ளது" என்றார்.

இதற்கு எதிர்க்கட்சி தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். பிரச் சினைக்கு தீர்வு காண அரசு விரும்பவில்லை எனக்கூறி காங்கிரஸ், பாஜக, முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

# சபரிமலைக்கு பெண்களை அனுமதிக்கும் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

புதுடெல்லி, நவ.16

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு அனைத்து வயது பெண்களும் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துத் தனது ஆயம் வழங்கிய தீர்ப்பிற்கு இடைக்காலத் தடை விதிக்க இந்திய உச்ச நீதிமன்றம் மீண்டும் மறுத்து விட்டது.

இந்த விவகாரத்தில் தேவைப்பட்டால் உரிய சம யத்தில் மத்திய அரசு தலையிடும் என்று அமைச் சர் மகேஷ் சர்மா தெரிவித்தார்.

சபரிமலை ஐய்யப்பன் கோவிலுக்கு அனைத்து வயதுப் பெண்களும் செல்ல அனுமதித்து கடந்த செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி அப்போதைய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியது.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை கேரள அரசு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதால் இதை எதிர்த்து மாநிலத்தில் தீவிர போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக 48 மறு ஆய்வு மனுக் கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை நேற்று முன்தினம் பரிசீலனை செய்த உயர் நீமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமை யிலான 5 நீதிபதிகள் அமர்வு வருகிற ஜனவரி மாதம் 22ஆம் திகதி அவற்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் என்று அறிவித்தது. மேலும் ஏற்கனவே உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு தடை விதிக்கவும் மறுத்தது.

இதற்கிடையே, பிரபல சட்டத்தரணி மத்யூஸ் ஜே.நெடும்பரா, தேசிய ஐயப்ப பக்தர்கள்(பெண்கள்) சங்கத்தின் சார்பில் மறு ஆய்வு மனு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அதில் சபரிமலை விவகாரத்தில் உச்சநீதிமன்றம் ஏற் கனவே அளித்த தீர்ப்புக்குத்தடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

நெடும்பரா தனது மனு குறித்து தலைமை நீதி பதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு முன்பாக இதனை நேற்றுக் குறிப்பிட்டார். அதற்கு நீதிபதிகள் அமர்வு, சபரிமலையில் பெண்களை அனுமதித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குத் தடை விதிக்க முடியாது என்று மீண்டும் மறுத் தது. அனைத்து மறு ஆய்வு மனுக்கள் மீதும் ஜனவரி 22 ஆம் திகதி விசாரணை நடைபெறும், அதுவரை நீங்கள்(நெடும்பரா) பொறுத்திருக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் அமர்வு தெரிவித்தது.

இந்த நிலையில், மத்திய கலாசார அமைச்சர் மகேஷ் சர்மா டெல்லியில் நிருபர்களிடம் கூறுகை யில், "சபரிமலை விவகாரத்தில் மக்களின் உணர் வுகளை மனதில் கொண்டு முழுமையாக அதை அணுகவேண்டும். இதனால் யாருடைய மனதும் காயம் அடையக் கூடாது" என்றார்.

இப்பிரச்சினையில், நிலைமைக்கு ஏற்ப அவசர சட்டம் பிறப்பிக்கப்படுமா? என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், "இதுபற்றி கேரள அரசுதான் முடிவு செய்யவேண்டும். தேவைப்படும் பட்சத்தில் உரிய நேரத்தில் இதில் மத்திய அரசு தலையிடும்" என் றும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# எதேச்சாதிகாரத்தை நோக்கி நகருகின்றது வங்காள தேசம்?



மக்கள்தொகையில் உலகின் எட்டாவது பெரிய நாடான வங்கதேசம், மிகக் குறைந்த வளர்ச்சிபெற்ற நாடுகளின் பட்டியலிலிருந்து நீங்கிவிட்டது. 'நடுத்தர வருவாயுள்ள நாடு' என்ற நிலைக்கு உயர்கிறது. அடித்தளக் கட்டமைப்புகளில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆயத்த ஆடை தயாரிப்பில் உலகின் முன்னணி நாடாகிவிட்டது. இவ்வளவும் 2009 இல் பதவிக்கு வந்தது முதல் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசின் சாதனைகள்.

மியான்மரிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிவந்த ரோஹிங்கியா முஸ்லிம்களுக்குப் புகலிடம் கொடுத்ததற்காக உலகம் அவரைப் பாராட்டுகிறது. மதத் தீவிரவாதம் பரவாமல் தடுப்பதற்காக மேற்குலகு பாராட்டுகிறது. வட கிழக்கில் தீவிரவாதிகளின் முகாம்களை அகற்றியதற்காக இந்தியா பாராட்டுகிறது.

இன்னொருபக்கம், சுயேச்சையாகச் செயல்படும் நிலையிலிருந்து, எதேச்சாதிகாரத்துடன் செயல்படுபவராக மாறிவிட்டார் ஹசீனா. அவரது ஆட்சியை விமர்சிப்பதே தேசத்துரோகக் குற்றமாகக் கருதப்படுகிறது. நாடாளுமன்றம், நீதித் துறை, அதிகாரவர்க்கம் எல்லாமே ரப்பர்ஸ்டாம்புகள் ஆகிவிட்டன. பிரதமரின் மகன் சஜீப் வாசத் ஜாய் அமெரிக்காவிலிருந்து வந்து அரசு ஆலோசகராகச் செயல்படுகிறார். அவாமி லீக் கட்சி அவருடைய சொத்தாகிவிட்டது. வாரிசு அரசியல் அரங்கேறுகிறது. அப்பா, மகள், பேரன் புகைப்படங்களுடன் விளம்பரப் பதாகைகள் எங்கும் காணப்படுகின்றன.

### நெருங்குகிறது தேர்தல்

இந்நிலையில், வங்கதேச நாடாளுமன்றத்துக்கு டிசம்பர் 30 இல் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஹசீனாவும் அவருடைய அவாமி லீக் கட்சியும் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. அதற்குப் பிறகு எதிர்க் கட்சிகள் அரசுக்கு எதிராகச் செயல்படுவதென்றால் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் போராட்டங்களில் ஈடுபடுவதுதான் என்று தோன்றுகிறது.

பத்திரிகைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் வந்துவிடாமலிருக்க கடந்த செப்டம்பரில் நாடாளுமன்றத்தில் 'டிஜிட்டல் பாதுகாப்புச் சட்டம்' என்ற கருத்துரிமைக் கட்டுப்பாடு சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. 'தி டெய்லி ஸ்டார்' செய்தித்தாளின் ஆசிரியர் மபுஸ் ஆனம் மீது அவதூறு, தேசத்துரோக வழக்குகள் 12க்கும் மேல் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வீதிகளில் அரசுக்கு எதிராகப் போராடிய இளைஞர்கள் மீது அவாமி லீக் கட்சியின் குண்டர்கள் தாக்குதல் நடத்தியதை நேரலையாக ஒளிபரப்பியதற்காகப் புகைப்படக் கலைஞர் கிதுல் ஆலம் நூறு நாள்களுக்கும் மேலாகச் சிறையில் இருக்கிறார்.

### எதிர்ப்புக்கு இடமில்லை

ஹசீனாவின் அரசியல் ஆளுமை, நோக்கங்கள், புவிசார் அரசியல் சார்பு ஆகியவற்றுக்கெல்லாம் காரணம் 1975 இல் அவருடைய தந்தை முஜிபுர் ரெஹ்மானும் தாயும் சகோதரர்களும் இதர குடும்ப உறுப்பினர்களும் திடீர் ராணுவப் புரட்சியில் படுகொலை செய்யப்பட்டமைதான் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள். முஜிபுர் ரெஹ்மான் குடும்பத்தில் எஞ்சிய இருசகோதரிகள் ஷேக் ஹசீனா, ஷேக் ரெஹானா ஆகியோருக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அரசியல் அடைக்கலம் கொடுத்தார். அதனாலேயே புதுடெல்லிக்கு நெருக்கமாக இருக்கிறார்.

சுமார் இருபதாண்டுகளாக, வங்கதேச அரசியல் என்பது அவாமி லீக் தலைவர் ஷேக் ஹசீனா, வங்கதேச தேசியவாதக் கட்சி (பிஎன்பி) தலைவர் பேகம் காலிதா ஜியா இடையிலான தனிப்பட்ட மோதலாகவே தொடர்கிறது. 2014 பொதுத் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவை காலிதா ஜியா எடுத்த பிறகு, ஹசீனாவால் எளிதில் காலூன்ற முடிந்தது. இப்போது வங்கதேசம் கிட்டத்தட்ட அவாமி லீக் என்ற ஒரு கட்சி ஆட்சியின் கீழ் இருக்கிறது. இரண்டு முறை பிரதமராக இருந்த காலிதா லஞ்சம் வாங்கிய வழக்கில் சிறையில் இருக்கிறார். சிறைத் தண்டனையும் 10 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வலுவான எதிர்க்கட்சி இல்லாததால் அரசை எதிர்ப்பவர்கள் திடீரெனக் காணாமல் போவதும், போலி மோதல்களில் உயிரிழப்பதும் அதிகரித்துள்ளன. ராணுவ ஆட்சியில்கூட இருந்திராத வகையில் இராணுவ உளவுப்பிரிவினர் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் பார்வையாளர்கள் கூறுகின்றனர். அரசுடனும் ஆளும் கட்சியுடனும் இணக்கமாக இல்லாத அமைப்புகளும் தனி நபர்களும் ஜமாதி, ரசாக்கர்களின் கூட்டாளிகள், மேற்கத்திய மேட்டுக்குடிகள், தாகூரர்கள், பாகிஸ்தானி உளவாளிகள், மொசாத் ஒற்றர்கள் என்றெல்லாம் முத்திரை குத்தப்படுகின்றனர்.

### மக்கள் கிளர்ச்சி

மதப் பழமைவாதத்தை எதிர்ப்பவர் என்று ஹசீனா சர்வதேச அரங்கில் காட்டப்படுகிறார். ஆனால், அவரோ 'ஹெபாசத்-இ-இஸ்லாம்' என்ற மதப் பழமைவாத அமைப்பை ஆதரிக்கிறார். பாடப் புத்தகங்களிலிருந்து மதச்சார்பற்ற கருத்துகள் நீக்கப்படுகின்றன. அரசு வேலைகளைப் பெற பல்கலைக்கழகப் பட்டங்களுக்கு இணையாக மதக் கல்விப் பட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.


அரசியல் எதிர்ப்பு அடக்கப்படுவதால் மக்களுடைய கோபம் படிப்படியாக வளர்ந்து ஏதாவது ஒரு விதத்தில் வெடிக்கத் தயாராகிக்கொண்டிருக்கிறது. பாகிஸ்தானுடன் இணைந்து வங்க சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்கிய அப்துல் காதர் முல்லாவுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்ற பாக் இயக்கம், அரசுத் துறை வேலைவாய்ப்பில் 56% இட ஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டம், சாலைப் பாதுகாப்பு கோரிய போராட்டம் ஆகியவை இவற்றையே உணர்த்துகின்றன. இந்தப் போராட்டங்களை ஹசீனா அடக்கிவிட்டார்.

வங்கதேசத்தில் அரசியல் மாற்றத்துக்கான அறிகுறி நவம்பர் முதல் வாரத்தில் தென்பட்டது. 1972 இல் நாட்டின் அரசியல் சட்டத்தை வகுத்தவர்களில் ஒருவரும் மூத்த ராஜதந்திரியுமான கமால் உசைன் தலைமையிலான 'ஜாதீய ஐக்கிய முன்னணி' பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்க ஒப்புக்கொண்டார் ஹசீனா. பிஎன்பி உட்பட 4 கட்சிகள் முன்னணியில் இடம் பெற்றுள்ளன. முன்னணியின் ஏழு கோரிக்கைகளில் ஒன்று நடுநிலையான அரசின் தலைமையில் தேர்தல் நடைபெற வேண்டும், காலிதா உட்பட எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது. ஒரு கோரிக்கையையும் பிரதமர் ஏற்கவில்லை.

ஹசீனா அரசு சகிப்புத்தன்மை இல்லாமல் செயல்படுகிறது, சலுகைசார் முதலாளித்துவத்தை ஊக்குவிக்கிறது. இது அரசின் அனைத்து மட்டத்திலும் எதிரொலிக்கிறது. நடுத்தர வருவாயுள்ள நாடாக வங்கதேசம் போகக்கூடிய பயணத்துக்கு இது தடையாக உள்ளது. சமூக - பொருளாதார முன்னேற்றத்துக்காக பாடுபட்டவர் அவை எல்லாவற்றையும் இப்போது பலியிடத் தயாராகிவிட்டதைப் போலத் தோன்றுகிறது. தான் ஏறியுள்ள புலியின் மீதிருந்து ஹசீனா இறங்குவதே வங்கதேசத்துக்கு நல்லது.

-கனகமணி தீட்சித்

# அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி பதவிக்கு இந்திய வம்சாவளிப் பெண்



வொஷிங்டன்,நவ.16

அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிக்கு இந்திய வம்சாவளி பெண் நியோமி ராவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வொஷிங்டனில் வெள்ளை மாளிகையில் நடந்த தீபாவளி கொண்டாட்டத்தின் போது இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி டிரம்ப் வெளியிட்டார்.

அமெரிக்காவில் பல பெண்களின் பாலியல் புகார்களுக்கு ஆளானவர் நீதிபதி பிரெட் கவனாக் (வயது 53). அங்கு வொஷிங்டன் மாகாணத்தில் கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். அவரை உச்சநீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி டிரம்ப் தேர்வு செய்தார். அதற்கு நாடாளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளித்தது. அதையடுத்து அவர் கடந்த மாதம் 6 ஆம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி ஏற்றார்.

அதைத்தொடர்ந்து அவர் வகித்து வந்த வொஷிங்டன் மாகாணம், கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவி காலியானது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்துக்கு அடுத்த இடத்தில் வைத்து பார்க்கப்படுவது இந்த மன்று ஆகும்.

இந்தப் பதவிக்கு இந்திய வம்சாவளி பெண்ணான நியோமி ஜகாங்கிர் ராவ் (வயது 45) என்பவரை ஜனாதிபதி டிரம்ப் தேர்வு செய்துள்ளார்.

இதுபற்றிய அறிவிப்பை வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தின்போது அவர் வெளியிட்டார்.

அப்போது அவர் கூறுகையில், “கொலம்பியா மாவட்ட மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரெட் கவனாக் இடத்துக்கு நியோமி ராவை நான் தேர்வு செய்து இருக்கிறேன். அவர் அற்புதமான மிகச்சிறப்பான நபராக இருப்பார்” என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து நியோமி ராவ், ஜனாதிபதி டிரம்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். அப்போது அவர், “செல்வாக்கு மிக்க அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிக்கு என்னை தேர்வு செய்திருப்பதின் மூலம் என் மீது ஜனாதிபதி வைத்துள்ள நம்பிக்கையை காட்டி உள்ளார். அதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்” என குறிப்பிட்டார்.

நியோமி ராவ் தேர்வு பற்றிய அறிவிப்பை டிரம்ப் வெளியிட்ட தீபாவளி கொண்டாட்டத்தில், இந்திய தூதர் நவ்தேஜ் சிங் சர்னா உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

நியோமி ராவ் தேர்வுக்கு அந்த நாட்டின் நாடாளுமன்ற செனட் சபை தனது ஒப்புதலை வழங்க வேண்டும். அந்த சபையில் டிரம்பின் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை பலம் இருப்பதால், நியோமி ராவ் தேர்வுக்கு ஒப்புதல் கிடைப்பது உறுதி.

நியோமி ராவ் தேர்வு செய்யப்பட்டுள்ள நீதிமன்றில் இந்தியரான சீனிவாசன் ஏற்கனவே நீதிபதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

நியோமி ராவ், இந்தியாவை சேர்ந்த பார்சி இன பெற்றோரான ஜகாங்கிர் நாரியோாங் ராவ், ஜெரின் ராவ் தம்பதியரின் மகளாக 1973 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 22 ஆம் திகதி பிறந்தவர். மிச்சிகனில் வளர்ந்தார். டெட்ராய்டு பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். புகழ்பெற்ற ஏல் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு படித்து மிகச்சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றார். பின்னர் சிகாகோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் படித்து சட்டத்தில் பட்டம் பெற்றார்.

சிறிது காலம் ஜார்ஜ் மேசன் பல்கலைக்கழக சட்டக்கல்லூரியில் பேராசிரியராக இருந்தார்.

கடந்த ஆண்டு இவரை ஜனாதிபதி டிரம்ப், தகவல் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலகத்தின் நிர்வாகியாக நியமித்தார்.

இவர் அமெரிக்காவில் ஆலன் லெப்கோவிட்ஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார். இந்த தம்பதியருக்கு 2 குழந்தைகள் உள்ளன

# மரண தண்டனைகளை நிறுத்த ஐ.நா. சபையில் தீர்மானம்

மரண தண்டனைகளை நிறுத்தி வைக்க கோரும் தீர்மானம் ஐ.நா. சபையில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் வெற்றி பெற்றது. மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலகளவில் ஓங்கி ஒலித்து வருகிறது.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச்சபையின், 3 ஆவது குழுவில் மரண தண்டனையை ஒழித்துக்கட்டும் வகையில், அந்த தண்டனைகளை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்க கோரும் வரைவு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தீர்மானத்தின் மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் தீர்மானத்துக்கு ஆதரவாக 123 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் கிடைத்தன. 30 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

எனவே பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. இதுபற்றி ஐ.நா. சபைக்கான இந்தியத் தூதரகத்தின் முதல் நிலைச் செயலாளர் பவுலோமி திரிபாதி கூறும்போது, இந்த வரைவுத் தீர்மானமானது, மரண தண்டனையை ஒழிக்கிற வகையில், அந்த தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்க கோருகிறது. ஆனால் நாங்கள் எதிராக வாக்குப் போட்டோம். ஏனெனில் மரண தண்டனைக்கு ஆதரவான சட்டம் இந்தியாவில் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில், அரிதிலும் அரிதாகத்தான் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. ஆனால் இதில் தேவைப்படுகிற அனைத்து விதமான சட்ட நடைமுறைகளையும் இந்தியா கொண்டுள்ளது. நியாயமான விசாரணை நடத்தப்படுகிறது. - என்று குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# அரசமைப்புக் கருவாடு

**சேகு தாவூத் பஸீர்**



ஜே. ஆர். ஜெயவர்த்தனா நாடாளுமன்றில் பெற்றிருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்டு தனக்கும், மேற்குலகுக்கும் வசதியாக 1978 ஆம் ஆண்டு அரசமைப்பை புதிதாக இயற்றினார். மேற்குலகு ஏனைய நாடுகளைச் சுரண்டுவதற்காக அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக வழங்கிய Draft தான் புதிய அரசமைப்பாக அப்போது அமைந்தது.



அன்றைய காலத்தில் இரண்டு பெரிய கட்சிகளும் ஐவைந்து ஆண்டுகளில் அல்லது இதைவிடவும் குறைந்த ஆண்டுகளில் மாறி மாறி ஆட்சிக்கு வந்துகொண்டிருந்தன.

மேற்கு, திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆசியப் பிராந்தியத்தில் அறிமுகப்படுத்துவதற்கு வசதியாக இலங்கையில் பிரித்தானியாவின் முதலாளிய முகவர்கள் நிறைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியைத் தனது முகவராகத் தெரிவு செய்திருந்தது.

இதற்கேற்ப, ஆகக் குறைந்தது 10



வருடங்களாவது தொடர்ந்தேர்ச்சியாக நாட்டை ஆள்வதற்கு நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட தனி அதிபரையும், நாடாளுமன்றில் மிகப் பெரும்பான்மையை ஐ.தே. கட்சி வைத்திருப்பதற்கும் வசதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜே. ஆர். 1906 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி பிறந்தவராவார். இவர் 1978 இல் நாட்டின் தலைமை அதிகாரத்துக்கு வந்த போது அவருக்கு 72 வயதாகியிருந்தது. இந்த வயதையும் கணக்கிட்டே புதிய அரசமைப்பின் சரத்துகள் வரையப்பட்டன. ஜெயவர்த்தன ஆகக் கூடியது 82 வயதையடையும் 10 வருடங்கள் வரைதான் திடகாத்திரமான உடல் மற்றும் மன அமைப்பில் இருக்க முடியும் என்ற கருதுகோளில்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் இரண்டு முறை மாத்திரம் பதவியில் இருக்கலாம் என்ற சரத்தை அவர் புதிய அரசமைப்பில் உட்புகுத்தினார். 90 வயது வரைத் தான் உயிருடனும் திடகாத்திரமாகவும் இருக்க முடியும் என்று நம்பியிருந்தால் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கான காலஎல்லையை யாப்பில் வரையறுத்திருக்கமாட்டார் என்பது நம்பக்கூடிய வாதமாகும். இதுமட்டுமல்ல தனது கட்சி அடுத்த தேர்தலில் தோற்றுவிடும் என்றும் அவர் நம்பியிருந்தார்.



இதனாலதான், சிங்களச் சாதியமைப்பில் கீழிருந்த அன்றைய பிரதமர் பிரேமதாச தோற்றுவிடுவார் என்று நம்பி ஜனாதிபதி வேட்பாளராக அவரை ஜே. ஆர். அங்கீகரித்தார். பிரேமதாச தோற்றால் உயர் குலத்தைச் சேர்ந்த லலித் அத்துலத்முதலி அல்லது காமினி திசாநாயக்கா கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றி அடுத்த தேர்தலில் வெற்றியடைய முடியும் என்றும் அவர் நினைத்தார். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் வன்முறையின் துணையோடு பிரேமதாச வெறும் இருபத்தி மூன்று இலட்சம் வாக்குகளைப் பெற்று அன்று வெற்றி பெற முடிந்தது. ஏற்கனவே தனக்கு நிகராக நின்று வெற்றி பெறக் கூடியவரான சிறிமாவின் குடியுரிமையை ஜே. ஆர். பறித்திருந்தார் என்பதையும் இவ்விடத்தில் கணக்கில் எடுக்க வேண்டும். இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கட்டுமானங்களில் பலவீனம் அடைந்திருந்ததை ஜே. ஆர். கணக்கெடுக்கத் தவறியிருந்தமையும் பிரேமதாசவின் வெற்றிக்குக் காரணமாகும்.

ஜே. ஆர். சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தனது கட்சியின் நாடாளுமன்ற அதிகாரத்தை மேலும் ஒரு தவணைக் காலத்துக்கு நீடித்திருந்தார். நிறைவேற்று அதிகாரத்தை மீயுயர் நீதிமன்றம் உட்பட எந்தவொரு நீதிமன்றமும் கேள்வி கேட்க முடியாதபடி அரசமைப்பை வரைந்தார். பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதை வலுப்படுத்தினார். இவ்வாறான அதிகாரங்களைக் கொண்ட 1978 ஆம் ஆண்டைய அரசமைப்பு, இலங்கையின் உன்னத தமிழ்ச் சாதியைச் சேர்ந்த ஐரோப்பாவில் வாழும் வின்சன்ற் என்ற சட்டவல்லுனரின் உதவியோடு எழுத்துருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த அரசமைப்பு நிறைவேறிய அன்றே நமது நீதித்துறை பலவீனமடைந்ததோடு, அது அரசியல் அதிகாரத்துக்கு அச்சமடையும் நிலையும் தோன்றியது.

19 ஆவது திருத்தத்தின் மூலம் நீதித்துறை இழந்திருந்த சுயாதீனமும், அரசியல் அச்சமும் நீங்கிவிட்டதா என்ற கேள்விக்கு பதில் நேற்று வரை இல்லாதிருந்தது.



ஜனாதிபதி மைத்திரி நாடாளுமன்றைக் கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு மீயுயர் நீதிமன்று கடந்த 13 ஆம் திகதி வழங்கிய இடைக்கால தடை மூலம் நீதித்துறை பலமடைந்துவிட்டதா என்பதையும் சரியாக தீர்மானிக்க முடியவில்லை.

தான் இரண்டாவது தடவை ஜனாதிபதியாகப் பதவி வகித்த இறுதி 6 மாத காலத்தில் மூன்று அமைச்சர்கள் மாத்திரமே தன்னைச் சந்திக்க வந்தனர் என்று ஜே. ஆர். எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். இவரது இந்த அனுபவக் குறிப்புதான் சந்திரிக்காவுக்கும் கிலேசத்தை ஏற்படுத்தியது. இவர், ஒரு வருடத்துக்கு முன்பே இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியதனால், தான் முதல் தவணையில் எஞ்சியிருந்த ஒருவருடத்தையும் சேர்த்து இரண்டாவது தவணையில் இன்னொருவருடம் கூடுதலாகப் பதவியில் இருக்க முடியுமா என்று மீயுயர் நீதிமன்றத்தைக் கேட்ட போது, அவரே பிரதம நீதியரசராக நியமித்த சரத் என் சில்வா இல்லை, முடியாது என்று தீர்ப்பு வழங்கினார். இத்தீர்ப்பினால் சந்திரிக்கா கவிழ்ந்தார்.

நிறைவேற்று அதிகாரத்தின் இறுதிக் கட்ட பலவீன நிலைமை ஜே ஆரின் வாக்குமூலத்தினால் வெளிப்பட்டதைத் தொடர்ந்து, சந்திரிகா தடுமாறியதைப் போன்றே மஹிந்தவும் தடுமாறியதன் விளைவே 18 ஆவது அரசமைப்புத் திருத்தமாகும். பிரதம நீதியரசர் ஷிராணியை நாடாளுமன்றத் தீர்மானம் மூலமும் – பலாத்காரமாகவும் வெளியேற்றுவதற்கு மஹிந்த எடுத்த நடவடிக்கைக்கு அன்றைய அரசியல், நீதித்துறைக் கள நிலைமைகள் காரணமாகும்.

ஜே ஆர். ஜெயவர்த்தனா, சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்தமை தனக்கு நிகரான ஒருவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதைத் தடுப்பதற்கான ஜனநாயகத்தை மீறிய அரசமைப்புச் செயற்பாடாகும். இவ்வாறே, மஹிந்த தான் மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டத் தடையாக நின்ற பிரதம நீதியரசர் ஷிராணியைப் பதவி நீக்கினார். 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினார். இவை எல்லாம் ஜனநாயகம் என அழைக்கப்படும் (Socalled Democracy) ஜனநாயகத்தை மீறிய அரசமைப்புத் திருத்த செயற்பாடுகளாகும்.

ஜே ஆர் தனது அரச பதவியை நிலைநிறுத்தும் நலனுக்காக அரசமைப்பு ஆக்கம் மற்றும் திருத்தம் மூலம் எதனைச் செய்தாரோ, சந்திரிக்கா எதனைச் செய்ய முயன்றாரோ, மஹிந்த எதனைச் செய் தாரோ அதனைத்தான் ரணிலும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் செய்தார். இதனைத்தான் மைத்திரியும் இப்போது செய்கிறார்.



அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் பலவீனமான வேட்பாளரான ரணில், தன்னை விஞ்சும் வேட்பாளராக வரக்கூடியவர்கள் எனத் தாம் நினைத்த அனைவரையும் 19 ஆவது திருத்தம் மூலமாக வேட்பாளராக வர முடியாதவர்களாக்கியுள்ளார். 36 வருடங்களுக்கு முன்பு ரணிலின் மாமாவான ஜே. ஆர். அன்று ஒருவரை மட்டும் (சிறிமாவோவை மட்டும்) எதிர்கொள்ளத் தயங்கினார், இன்றோ மருமகன் ரணில் மூன்று பேரை எதிர்கொள்ளத் தயங்குகிறார்.



மஹிந்த வேட்பாளராவதைத் தடுப்பதற்காக மூன்றாவது முறை ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முடியாது என்றும், கோட்டாபய வேட்பாளராவதைத் தடுப்பதற்காக இரட்டைப் பிரஜாவுரிமையுடையவர் தேர்தல்கள் எதிலும் வேட்பாளராக இருக்க முடியாது என்றும், நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராவதை தடுக்கும் வகையில் 35 வயதையடையாத ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முடியாது என்றும் 19 ஆவது திருத்தத்தில் ரணில் எழுதி வைத்துள்ளார். மேலும், இன்றைய ஜனாதிபதியின் அதி



காரச் சிறகுகளையும் 19 இன் மூலம் கத்திரித்து வைத்துள்ளார்.

ரணில் இன்றும் நாளையும் ஜனாதிபதியாக இருக்க விரும்பியதன் விளைவே 19 ஆவது அரசமைப்புத் திருத்தமாகும்.

இந்த அடிப்படையிலமைந்த சிங்களப் பெரும்பான்மை அரசியல் முதலாளிகளின் அதிகாரப் போட்டி எனும் தொட்டிலின் மேலே கட்டியிருக்கும் சுத்துமாத்துக் கிலுகிலுப்பையின் சத்தத்துக்கு ஆடும் குழந்தைகளாக நமது சிறுபான்மை அரசியல்வாதிகள் ஏன் தமது கால்கைகளை அசைத்து ஆடியபடிக்கு கெக்கலிக்கிறார்கள்?

ஓஹ்.. அவர்களும் முதலாளிகள்தானே... அதனால்தானே, அதனால் தானோ?

சிறுபான்மையினரான நாம் கிலுகிலுப்பைக்கு குதிக்கவோ – கிழுகிழுப்பை அடையவோ நிகழ் அரசியலில் எதுவுமில்லை. அமைதி காப்போம்! பாதுகாப்பாய் இருப்போம்!!

# கஜாவை எதிர்கொள்ள அதிகாரிகளும் மக்களும் தயாராக இருக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் நேற்று அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், நவ. 16

இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள அதிகாரிகளையும் மக்களையும் தயாராக இருக்கு மாறு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அறி வுறுத்தல் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில் -

வளிமண்டலத் திணைக்களத்தின் தகவல்களின் படி கஜா எனப் பெயரி டப்பட்ட புயல் இன்று (நேற்று) மாலை இலங்கையின் வடபகுதியைத் தாக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இயற்கையின் சீற்றத்தால் சொத்தழிவுகள், உயிர்ச் சேதங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்றும் வரவுள்ளதாகக் கூறப்படும் கஜா என்ற புயல் மிகவும் அசுர வேகத்தில் தாக்கத்தை உருவாக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

எனவே இந்த அனர்த்தத்தை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மக்களும் அதிகாரிகளும் அவதானமாக இருக்கவேண்டும்–என்றார். (ஐ)

# ஹெரோய்னை வைத்திருந்த மாணவனுக்கு 1 மாதச் சிறை

## யாழ். நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த பாடசாலை மாணவனுக்கு ஒரு மாத காலச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

ஒரு மாத காலச்சிறைத்தண்டனையை அனுபவிக்க மாணவனைச் சான்று பெற்ற சீர்திருத்தப் பாடசாலையில் சேர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாண நகர் பகுதியில் 18 வயதுடைய மாணவன் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 10 மில்லிக்கிராம் உயிர்க்கொல்லி ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

அவர் யாழ்ப்பாணம் கல்லூரியின் மாணவன் என்று பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதிமன்றில் மாணவன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனால் அவருக்கு ஒரு மாத காலச்சிறைத்தண்டனையை விதித்த யாழ்ப்பாணம் நீதிவான், மாணவனை அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் சேர்ப்பித்து தண்டனைக் காலத்தை கழிக்க அனுமதியளித்தார். (ஐ)

# முல்லைத்தீவை மிரட்டும் 'கஜா'!



முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மாவட்டம் 'கஜா' சூறாவளியினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாக இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதற்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மாவட்டச் செயலகத்தில், நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக, 427 குடும்பங்களைச் சேர்ந்த 1,155 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மாவட்டத்தில் முழுமையாக 90 வீடுகளும் பகுதியளவில் 18 வீடுகளும் சேதமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு, சமைத்த உணவு வழங்கப்பட்டு வரும் அதேவேளை, அவர்களுக்கான உலர் உணவு வழங்குவதற்கு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, 5 குளங்கள் உடைப்பெடுத்துள்ளனஎனத் தெரிவித்த அவர், 10 குளங்களில் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதற்கமைய, பாதிக்கப்பட்ட குளக் கட்டுக்களைப் புனரமைக்கும் பணிகளில் படைத் தரப்பு, கமக்கார அமைப்புகள், கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து ஈடுபட்டன எனத் தெரிவித்தமையுடன், நித்திகைகுளக்கட்டின் புனரமைப்புப் பணிகளை மாத்திரம் முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டதாகவும் அவர் குறிப் பிட்டார்.

இதனால், நீரைத் தேக்கி வைத்திருக்கும் செயற்பாட்டை நீர்பாசனத் திணைக்களம் படையினருடன் இணைந்து முன்னெடுத்ததாகத் தெரிவித்த அவர், ஏனைய குளங்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கூறினார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த நிலை இயல்பு நிலைமையில் காணப்படுகின்ற இத்தருணத்தில், 'கஜா' சூறாவளி யின் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஏற்படக்கூடுமென, அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த எச்சரிக்கைக் கமைய, அதற்கான முன்னாயத்த ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# பிரதமர் ஒருவரை நியமிக்க சபாநாயகரினால் முடியாது

## முன்னாள் சபாநாயகர் சமல் கூறுகிறார்



சபாநாயகரினால் பிரதமர் ஒருவரை நியமிக்க முடியாது எனவும் அவ்வாறு நியமிக்க முடியும் என்றால் அன்று நான் சபாநாயகராக இருந்தபோது எனக்குத்தேவையானஒருவரைப் பிரதமராக நியமித்திருக்க முடிந்திருக்கும்எனமுன்னாள்சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சபாநாயகர் நடுநிலையாகவும் சுயாதீனமாகவும் செயற்படவேண்டும். தான் எத்தகைய நிலைப்பாட்டுடன் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தாலும் எம்.பிக்கள் சொல்வதை செவிமடுத்து முடிவுகள் எடுப்பதே சபாநாயகரின் பொறுப்பாகும்.

ஆனால், சபாநாயகர் கரு ஜயசூரிய பக்கச்சார்பாகச் செயற்பட்டார் எனவும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டினார்.

# 19 ஆவது திருத்தத்தை மாற்றியமையே இன்றைய பிரச்சினைக்குக் காரணம்

## கூறுகின்றார் அங்கஜன் எம்.பி.



கொழும்பு, நவ. 16

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்களே ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான இன்றைய பிரச்சினைக்குக் காரணம் என பிரதியமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அங்கஜன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

கடந்த மூன்று வருடங்களாக நாட்டின் ஆட்சி சரியாக செல்லாத காரணத்தினாலேயே ஜனாதிபதி அதனை மாற்றியமைக்க முற்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி, பிரச்சினைகள் வலுப்பெற்று வருவதால், தேர்தலுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது–என்றார். (ஐ)

# அமைச்சுக்களுக்கு விசேட பாதுகாப்பு


கொழும்பு, நவ. 16

பாதுகாப்பு அமைச்சைத்தவிர ஏனைய அனைத்து அமைச்சுக்களினதும் பாதுகாப்புக்காக உடன் அமுலுக்கு வரும் வகையில், பொலிஸ் விசேட படையணி இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தீரும் வரை, இவ்வாறு பாதுகாப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக, பொலிஸ் விசேட படையணியின் கட்டளையிடும் அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம். ஆர். லத்தீப் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (ஐ)

# கஞ்சாவுடன் நால்வர் கைது!



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்ற பஸ்ஸில் கஞ்சா கடத்திச் சென்ற 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 1 கிலோ 580 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவில் நேற்று முன் தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வென்றது பங்களாதேஷ் அணி



சிம்பாப்வே கிரிக்கெட் அணி, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

அங்கு சென்றுள்ள சிம்பாப்வே அணி, பங்களாதேஷ் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று பங்களாதேஷ் அணி, தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது.

இதன் முதலாவது டெஸ்ட் போட்டியில், சிம்பாப்வே அணி 151 ஓட்டங்களால் சரித்திர வெற்றியைப் பதிவு செய்தது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று நடைபெற்று முடிந்துள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முஷ்பிகுர் ரஹிமின் இரட்டைச் சதத்தின் துணையுடன் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 522 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதன்போது பங்களாதேஷ் அணி சார்பில், முஷ்பிகுர் ரஹிம் ஆட்டமிழக்காது 219 ஓட்டங்களையும், மொஹிமுல் ஹக் 161 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் கெய்ல் ஜார்வீஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய சிம்பாப்வே அணி, 304 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது சிம்பாப்வே அணி சார்பில், அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக பிரெண்டன் டெய்லர் 110 ஓட்டங்களையும், பீற்றர் மூர் 83 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகளையும், மெஹிடி ஹசன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, 218 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 224 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இதன்போது பங்களாதேஷ் அணி சார்பில், அணித்தலைவர் மொஹமதுல்லா 101 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாக பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் கெய்ல் ஜார்வீஸ் மற்றும் டொனால்ட் ட்ரீபானோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதற்கமைய சிம்பாப்வே அணிக்கு 443 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய சிம்பாப்வே அணி, 224 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பங்களாதேஷ் அணி 218 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரைக், பங்களாதேஷ் அணி 1-1 என்ற கணக்கில் சம நிலைப்படுத்தியுள்ளது.

இதன்போது சிம்பாப்வே அணி சார்பில், பிரெண்டன் டெய்லர் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மெஹிடி ஹசன் 5 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக முஷ்பிகுர் ரஹிம் தெரிவு செய்யப்பட்டமையோடு, தொடரின் நாயகனாக தைஜுல் இஸ்லாம் தெரிவு செய்யப்பட்டார்.

# வென்றார் பெடரர்

ஐக்கிய இராச்சியத் தலைநகர் லண்டனில் இடம்பெற்று வரும் தொழில்முறை டென்னிஸ் வீரர்கள் சங்க இறுதிப் போட்டிகள் தொடரில், இலங்கை நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற உலகின் எட்டாம் நிலை வீரரான ஒஸ்திரியாவின் டொமினிக் தியெமுடனான போட்டியில் உலகின் மூன்றாம் நிலை வீரரான றொஜர் பெடரர் வென்றார்.

ஒஸ்திரியாவின் தியெமை, 6-2, 6-3 என்ற நேர் செற்களில் சுவிற்ஸர்லாந்தின் றொஜர் பெடரர் வென்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற உலகின் ஒன்பதாம் நிலை வீரரான ஜப்பானின் கீ நிஷிகோரியுடனான போட்டியில், 6-0, 6-1 என்ற நேர் செற்களில், உலகின் ஆறாம் நிலை வீரரான தென்னாபிரிக்காவின் கெவின் அன்டர்சன் வென்றார்.



# ஆஸ்திரேலியாவிலும் கோஹ்லி ஆதிக்கம்

## இங்கிலாந்து முன்னாள் வீரர் எச்சரிக்கை



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி, ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்திலும் ஆதிக்கம் செலுத்துவார் என இங்கிலாந்து முன்னாள் வீரர் மைக்கேல் வாகன் கருத்து தெரிவித்துள்ளார்.

நட்சத்திர வீரர்களான ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோர் தடையில் இருப்பதல் ஆஸ்திரேலியா அணி தற்போது தடுமாறி வருகிறது. இந்நிலையில், விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி அடுத்ததாக ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாட உள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ரி - 20 தொடரை வென்றுள்ள இந்திய அணி, அதே உத்வேகத்துடன் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை வெல்லுமா என்ற கேள்வி ரசிகர்களிடம் உள்ளது.

இது குறித்து இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் மைக்கேல் வாகனிடம் கேட்கப்பட்டது. அப்போது, ஆஸ்திரேலியாவில் விராட் கோஹ்லியின் ஆதிக்கம் தொடருமா என்றும் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ஆம் என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தார்.

# விடை பெறுகிறார் வெய்ன் ரூனி!



இங்கிலாந்து உதைபந்து அணியின் முன்னாள் தலைவரும், பிரபல வீரருமான வெய்ன் ரூனி, சர்வதேச உதைபந்துப் போட்டிகளிலிருந்து விடை பெறவுள்ளார்.

தான் விளையாடிய காலகட்டத்தில் அணிக்காகப் பல வெற்றிகளையும், கிண்ணங்களையும் பெற்றுக்கொடுத்த மனதிருப்தியுடன் அவர், அமெரிக்கா உடனான நட்பு ரீதியான போட்டியில் தனது சர்வதேச உதைபந்துப் போட்டிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

தனது 120ஆவது போட்டியில் கால் பதிக்கவுள்ள அவர், வெம்ப்ளி மைதானத்தில் நடைபெறும் போட்டியுடன் விடைபெறவுள்ளார்.

தனது ஓய்வு குறித்து வெய்ன் ரூனி, கூறிய கருத்துக்கள் இவை, 'பழைய சக வீரர்கள், பயிற்சியாளர்கள், இங்கிலாந்து பயிற்சியாளர் காரேத் சௌத்கேட் ஆகியோரைப் பார்க்க மகிழ்ச்சி தருகிறது. இங்கிலாந்து அணி சீருடையை மீண்டும் அணிவது பெருமை தருவதாகும்' என கூறினார்.

இங்கிலாந்து அணி சார்பில் அதிக கோல்கள் அடித்த சாதனை வீரரான ரூனி, அமெரிக்காவுக்கு இடம்மாறி அங்கு நடைபெறும் மேஜர் லீக் கால்பந்து தொடரில் விளையாடி வருகிறார்.

அங்கு டிசி யுனைடெட் அணிக்காக விளையாடிவரும் ரூனி, தற்போது அமெரிக்கா அணிக்கெதிரான போட்டிக்காக விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு முதன்முதலாக இங்கிலாந்து அணிக்காக விளையாடிய ரூனி, இதுவரை 119 போட்டிகளில் விளையாடி 53 கோல்களை நாட்டுக்காக பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதுதவிர ரூனி மன்செஸ்டர் யுனைடெட் கழக அணி 393 போட்டிகளில் விளையாடி, 183 கோல்களை அடித்துள்ளார். மேலும் எவர்டொன் அணிக்காக 98 போட்டிகளில் விளையாடி, 25 கோல்கள் அடித்துள்ளார்.

தற்போது டிசி யுனைடெட் அணிக்காக விளையாடிவரும் ரூனி, இதுவரை 21 போட்டிகளில் விளையாடி 12 கோல்களை அடித்துள்ளார். 25 இற்கும் அதிகமான விருதுகளை வென்று சாதித்துள்ள மகத்தான வீரர் ரூனியை வழியனுப்ப, இரசிகர்கள் மட்டுமல்லாது வெற்றியுடன் வழியனுப்ப இங்கிலாந்து அணியும் காத்துக் கொண்டிருக்கின்றது.







யாழ் நீரிழிவுக் கழகத்தினரால் யாழ். நகர் மத்திய சந்தைப்பகுதியில் நீரிழிவு நோயாளர்களை இனம் காணும் முகமாக நடத்தப்பட்டு வரும் நீரிழிவு பரிசோதனை முகாமின் மூன்றாவது தின நிகழ்வை யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி ஆரம் பித்து வைக்கின்றமையும் பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன் சுதன் அங்கு நீரிழிவு பரிசோ தனை மேற் கொள்கின்றமையையும் படங்களில் காணலாம். (இ)

# ரணிலுக்கு சத்திய சோதனை!

கொழும்பு, நவ. 16

நாடாளுமன்றத்தில் இன்று ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்கும் நம்பிக்கைப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் ஆதரவு தெரிவிக்கும் எம்.பிக்கள் அனைவரினதும் பெயர் அழைக்கப்பட்டு அவர்களின் குரல் வாக்குகள் பதியப்பட வேண்டுமென நேற்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலும் அது சொல்லப்பட்டுள்ளது.

அப்படியாயின் இதனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜே.வி.பியினருக்கும் செக் வைத்துள்ளார் மைத்திரி.

பிரதமர் மஹிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கே மேற்படி இரண்டு கட்சிகளும் ஆதரவை தெரிவித்தன. ஆனால் அது ரணிலை பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கான ஆதரவில்லை என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

ரணிலை ஆதரித்து இப்போதுள்ள அரசியல் நிலைமைகளில் வேறு அரசியல் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் விரும்புமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

# ரூபா மதிப்பு மீண்டும் சரிவு!

கொழும்பு, நவ. 16

இலங்கை மத்திய வங்கியினால் இன்று வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபா மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 178.10 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## ரணிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை தாம் அரசியல் கட்சித் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின் போது வெளிப்படுத்தினார் என அறிய வந்தது.

கடந்த 26 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றிய நாளிலிருந்து ஜனாதிபதி மைத்திரி – ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு இடம்பெறவில்லை.

இருவரையும் சந்தித்துப் பேசவைத்து, இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சில முக்கிய தரப்புகள் ஈடுபட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

ரணிலை மீளவும் பிரதமராக்கும் முயற்சிக்கு இடமளிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி எடுத்தாலும் –

ரணிலே தங்களின் நாடாளுமன்றக்குழுவினால் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று பிடிவாதமான நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தையும் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி எடுத்திருப்பதால் அவரை மீளவும் பிரதமராக நியமிக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாடாளுமன்றத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சஜீவ சிந்தக துல்லியமாக படம் பிடித்துள்ளார்.

அதேவேளை, மஹிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரகைகளால் ஐ.தே.க. உறுப்பினர்களைத் தாக்கும் காட்சிகளும் பதிவாகியுள்ளன. (ஐ)

## குளத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சுரேஸ்குமார் றொசான் (வயது –14) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

திருநாவற்குளம் பகுதியிலிருந்து அருகிலுள்ள பட்டக் காட்டுக் குளத்தில் குளிப்பதற்காகச் சிறுவர்களுடன் சென்று குளத்தில் குளித்துக் கொண்டிருந்தனர். அதன்போது அந்தச் சிறுவன் தண்ணீரின் ஆழத்திற்குச் இழுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

இதையடுத்து ஏனைய சிறுவர்கள் திருநாவற்குளம் பகுதியில் நின்ற இளைஞர்களுக்கு நடந்த விடயங்களை தெரியப் படுத்தியுள்ளனர்.

இளைஞர்கள் குளத்துக்குள் குதித்து நீரின் அடிமட்டத்திலிருந்த சிறுவனை 15 நிமிடங்கள் போராட்டத்தின் பின்னர் மீட்டனர். அவனை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும் மருத்துவப் பரிசோதனையில் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டான் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வைத்தியசாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் கரு ஜயசூரிய, ஐக்கிய தேசிய முன் னணியின் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பின் போதே மேற்படி முடிவு எட்டப்பட்டதாக அறிய வந்தது.

இந்தச் சந்திப்பில் இரா. சம்பந்தன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க மற்றும் கிரியல்ல, சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க, ராஜித சேனாநாயக்க போன்றோர் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:–

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்த இந்தக் கலந்துரையாடலின்போது நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் நிலைமை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை தங்கள் வசம் இருப்பதாக இதன்போது தெரிவித்த கட்சித் தலைவர்கள், அதனை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அரசமைப்பின் பிரகாரம் தாம் செயற்படுவார் எனவும் அதற்குரிய கௌரவத்தை அளிப்பார் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து தங்களது பெரும்பான்மையை உரிய முறையில் நிரூபிக்குமாறு ஜனாதிபதி கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

புதனன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் முதலாவது வாசகத்தை நீக்குதல் மற்றும் மீண்டும் நாளை (வெள்ளியன்று) அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. வாக்கெடுப்பை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அழைத்து மேற் கொள்ளுமாறும் ஜனாதிபதி வருகை தந்த கட்சித் தலைவர்கள் குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்கமைய நாடாளுமன்றத்தின் பெரும்பான் மையை நிரூபிக்குமாறு தெரிவித்த ஜனாதிபதி, அவ்விடயம் தொடர்பில் அரசமைப்பின் பிரகாரம் செயற்பட முடியும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

அவ்வாறே நாடாளுமன்றத்தினுள் அமைதி நிலையை உறுதி செய்து, ஜனநாயகம் மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக செயற்படுமாறும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தரப்பினரிடமும் கேட்டுக் கொண்டார். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குளிரூட்டப்பட்ட கடுகதி ரயிலுடனேயே இந்த விபத்து இடம்பெற்றது.

காரை கராஜ்க்குக் கொண்டு சென்றுவிட்டுத் திரும்புகையிலேயே குடும்பத் தலைவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜெகநாதன் (வயது–40) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ரயிலுடன் மோதுண்ட கார் சுமார் நூறு மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தம்மிடம் அரசை ஒப்படைக்கக் கோரி ஐக்கிய தேசிய முன்னணி நேற்றுப் பிற்பகல் கொழும்பில் பாரிய பேரணி ஒன்றை நடத்தியது.

கொழும்பு – லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகிய இந்தப் பேரணியில், பல்லாயிரக்கணக்கான ஐ.தே.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ரணில் மேலும் கூறியதாவது:

இலங்கை வரலாற்றில் எல்லோரும் நாடாளுமன்றத்தை மதித்தனர். இந்த ஜனாதிபதியே எட்டி உதைத்தார். நாடாளுமன்றத்தில் ஆதரவு இருந்தால் நம்பிக்கைப் பிரேரணை ஒன்றை ஏன் இவர்கள் கொண்டுவரவில்லை? சபாநாயகரின் முடிவை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும். நிராகரிக்க முடியாது. நாடாளுமன்றத்தில் சவால் இல்லாவிட்டால் மட்டுமே சிறுபான்மை அரசு ஒன்றை கொண்டு செல்லலாம்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒன்றாக நாம் எதிர்கொள்ளத் தயார். அரசமைப்பின்படி நாங்கள் செயற்படுவோம். சிறிசேன –ராஜபக்ஷ குழு நாடாளுமன்றத்தில் தோற்று நிற்கிறது . சபாநாயகரைப் பாதுகாத்து ஜனநாயகத்தை பாதுகாக்க நாங்கள் தயார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும் நான் தலை வணங்குகிறேன் – என்றார். (ஐ)

## எரிபொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவிலிருந்து இந்த விலை குறைப்பு அமுல்படுத்தப்படுமென எரிபொருள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய இதுவரை 145 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒக்டேன் 92 ரகப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 140 ரூபாவாகவும் 172 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒக்டேன் 95 ரகப் பெற்றோல் 167 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன் ஒட்டோ டீசல் 116 ரூபாவிலிருந்து 111 ரூபா வரையும் சுப்பர் டீசல் 141 ரூபாவிலிருந்து 136 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளனஎனஅமைச்சர் தெரிவித்தார்.

நிதியமைச்சுக்கும்எரிபொருள் அமைச்சுக்குமிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலையடுத்தே இந்த விலை குறைப்பு குறித்து தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். (ஐ)

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவாதமளித்தார் என்று ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்தது.

அத்துடன், இன்று நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது, உறுப்பினர்களின் பெயரைக் கூப்பிட்டு வாக்கைப் பதிவு செய்யுமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்றிரவு சந்திப்பு இடம்பெற்றது. சபாநாயகரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

சந்திப்புத் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தவை வருமாறு:–

ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் வெற்றிகாரமாக நடைபெற்று முடிந்தன. அதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சந்திப்பின்போது இரண்டு விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்முடன் பேச்சு நடத்தியிருந்தார்.

முதலாவதாக, நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைக் கருத்திற் கொண்டு ஜனநாயகரீதியாகவும் சுயாதீனமாகவும் தான் நடந்து கொள்வார் என அவர் வாக்குறுதி அளித்திருக்கிறார். அதுமட்டுமின்றி, நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழப்ப நிலை தொடர்பில் அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டிருந்தார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவோருக்கு ஆட்சி வழங்கப்படும் என்றும், நாடு இன்னும் ஓரிரு தினங்களில் வழமைக்குத் திரும்பும் எனவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் இதன்போது மற்றொரு விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அந்த விடயத்தை என்னால் பகிரங்கமாக தற்போது வெளியிட முடியாது. – என்றார்.

# மரணப் பொறியில் இருந்து நாட்டு மக்களை மீட்போம்!

## ஐ.தே.க. ஆர்ப்பாட்டத்தில் சஜித் சூளுரை



கொழும்பு, நவ. 16

மைத்திரி – மஹிந்த கூட்டணியால் இப்போது வைக்கப்பட்டுள்ள மரணப்பொறியில் இருந்து நாட்டு மக்களை மீட்போம்.

– இவ்வாறு சூளுரைத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ.

புதிய பிரதமர் மஹிந்த தலைமையிலான அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் குரல் பதிவு வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், மீண்டும் தம்மிடம் அரசை ஒப்படைக்கக் கோரி ஐக்கிய தேசிய முன்னணி நேற்றுப் பிற்பகல் கொழும்பில் மாபெரும் பேரணியை நடத்தியது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜித் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டின் ஜனநாயகத்தை – நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பெருமை சபாநாயகர் கரு ஜயசூரியவையே சாரும். முடிந்தால் – தைரியம் இருந்தால் நாளை (இன்று)நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்றுக்கு முன்வாருங்கள் என்று நான் போலி அரசுக்குச் சவால் விடுக்கின்றேன். மைத்திரி – மஹிந்த கூட்டணியால் இப்போது வைக்கப்பட்டுள்ள மரணப்பொறியில் இருந்து நாட்டு மக்களை மீட்போம் – என்றார்.

இந்தப் பேரணியில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. உரையாற்றும்போது –

எங்கள் எல்லாரையும் ஒற்றுமைப்படுத்தியமைக்காக முதலில் மைத்திரிக்கு நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். இந்தப் போலி ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு எங்கள் ஆட்சியை நாங்கள் மீண்டும் கொண்டுவருவோம். கொழும்புடன் இந்த மக்கள் போராட்டம் நிற்காது . கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என நாடளாவிய ரீதியில் போராட மக்களுடன் நாமும் முன்வருவோம் – என்றார்.

முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒன்றாக நடத்துங்கள். நான் இதை ஒரு சவாலாக ஜனாதிபதிக்கு விடுக்கின்றேன் என்று இந்தப் பேரணியில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் ஜனநாயகத்தில் நேற்றே மிக மோசமான நாள்!

## ஜேர்மனித் தூதுவர் கவலை



கொழும்பு, நவ. 16

இலங்கையில் ஜனநாயகத்தில் நேற்றைய நாள் மிகவும் மோசமான நாள் என ஜேர்மனியின் தூதுவர் ஜோர்ன் ரோஹெடே கூறியுள்ளார்.

நாடளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற பதற்றமான சூழ்நிலை அடுத்து அவர் தனது டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அதில் குறிப்பிட்டுள்ளதாவது: –

இலங்கையில் ஒரு நீண்ட பெருமை கொண்ட ஜனநாயக பாரம்பரியம் உள்ளது. ஆனால் இன்று சபாநாயகர் மீதான தாக்குதல் நடத்துவதும் வாக்குகளைத் தடுப்பதும் தான் ஜனநாயகமாக இருக்கின்றது. – என பதிவிட்டுள்ளார். (ஐ)

# நேற்று நாடாளுமன்றில் அடி, தடி ரகளைக் காட்சி























இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.